1125 சீர்திகழ் சிருங்கா ரந்தான்
சிறந்துயர் அங்க மாறும்
ஓர்தரு பாவ ராகம்
உற்றிடு தாள மாதி
நேர்தரச் சுவைக ளொன்பான்
நிலைதரப் போகம் விஞ்சப்
பார்பதித் தாயார் காணப்
பரணயில் திருக்கூத் தாமே 86

1126 செப்புசந் தியாநி ருத்தம்
தேவதைக் குலங்க ளுக்குத்
தப்பிலா இயங்கள் தந்து
தாங்கிடும் அவைபொ ருட்டா
ஒப்பிலா தொனிகள் தோன்ற
உமையவள் உவந்து காண
அப்பணி சடையன் எம்மான்
ஆடிய திருக்கூத் தாமே 87

1127 கண்ணுமுப் புரநி ருத்தங்
கருதிலெப் பொருளும் தானாய்
எண்ணிடக் காட்டி நின்றே
இறையவன் பரையார் காண
நண்ணுசூர்ஞ் சமர தின்றி
நண்ணலர் புரங்கள் வீயத்
தண்ணளி முறுவல் சிந்தித்
தந்திடு திருக்கூத் தாமே 88

1128 உக்கிர தாண்ட வம்மென்
றுரைதர வருநி ருத்தம்
தக்கதாம் வலிமை கொண்ட
தானவன் கயாசு ரற்காய்
அக்கணி டெம்மான் மேனாள்
அன்னைசுந் தரியார் காண
திக்கெலாம் அதிரும் பான்மை
செய்திடு திருக்கூத் தாமே 89

1129 சாற்றுசங் கார நிருத்தச்
சால்புதான் சொல்லுங் காலை
போற்றுசீர் மார்க்கண் டப்பேர்ப்
புனிதநன் மாணிக்காக
மாற்றருஞ் சீற்றம்மேய மறலியை
உதைத்து வீட்டி
ஏற்றணி கேதனத்தோன்
எடுத்தருள் திருக்கூத் தாமே 90

1130 கெடலருஞ் சிறப்பிற் றென்னாக்
கிளத்து மூர்த்துவ நிருத்தம்
கடலன கருணை வள்ளல்
காதினிற் குழையும் வீழத்
திடனுறு திருக்கா லோச்சித்
தேடியாங் கெடுத்த ணிந்தே
அடன்மலி காளி சாம்ப
ஆடிய திருக்கூத் தாமே 91

1131 தெரிதரு புயங்க நர்த்தம்
தெண்ணிலா வேணி எம்மான்
விரிதரு பால எக்கர்
விண்ணவர் கடைந்த நாளில்
இரிதர நஞ்சும் எய்த
எடுத்ததை மிடற்றில் வைத்தே
விரிகுழல் அன்னை அஞ்சா
வகைபயில் திருக்கூத் தாமே 92

1132 புகன்றிடு பூத நர்த்தம்
புரிசடை நிமலன் முன்னாள்
இகல்மலி தாரு கக்கான்
இருடியர் செலுத்தி நின்ற
அகன்மழு மானே சூலம்
அணிந்துமே கரித்தோல் போர்த்தி
முகனமர்ந் தருளி நின்று
முடித்திடு திருக்கூத் தாமே 93

1133 சுத்ததாண் டவமுந் தேரின்
தூமலர் சிந்தி நின்று
நத்தியே வானை முட்டி
நன்னிழல் நல்கிக் காக்கும்
உத்தம தருக்க ளோங்கும்
உயர்வனத் திருடியர்க் காய்
அத்தனார் உவந்தங் காடும்
அற்புதத் திருக்கூத் தாமே 94

1134 பிரளய தாண்ட வந்தான்
பேசிடின் எங்கள் ஐயன்
விரவிடு சராசரங்கள் வேறுள
அனைத்தும் தன்பால்
உரமுடன் வயமதாகி உறுவகை
விளக்கி வைத்தே
அரவணி செறித்து நின்றே
ஆடிடு திருக்கூத் தாமே 95

(வேறு – எண்சீர் விருத்தம்)

1135 சிதம்பரத்தில் நடமியற்றுங் கூத்த னாகித்
திருவருளை நல்குசிவ பரணர் மேலும்
விதந்தருமேழ் விடங்கதலம் விழைத்து கண்டு
வேண்டுநர்க்கு வேண்டுவரம் நல்க எண்ணி
இதந்தருசீத் தியாகேசர் என்ன நின்றே
எவ்வுலகும் தன்னடியைச் சிரமேற்கொள்ள
நிதமகலா தாங்காங்கே புக்கமர்ந்து
நேயமுடன் நிருத்தந்தான் புரிகின்றானே 96

(வேறு அறுசீர் விருத்தம்)

1136 சத்த விடங்கத் தலமெனவே
தக்கோர் ஏத்தும் திருப்பதிகள்
நத்துந் திருவா ரூரோடு
நாகைக் காரோணம் பின்னும்
தொக்க மறைக்கா டதனுடனாய்த்
துன்னும் வாய்மூர் நள்ளாறே
மிக்க திருக்கா றாயிலுடன் மேவுங்
கோளிலி அவை தாமே 97

1137 தெங்கம் பொழிகள் செழித்தோங்கும்
சீர்கொள் மாடம் பலவுடனாய
துங்கத் திருவா ரூரதனில் துதிசேர்
வீதி விடங்கர் தாம்
அங்கத் துறுநோய் அடியார்மேல்
அணுகா வகையின் அருள்செய்து
பொங்கும் இன்ப அசபை நடம்
புரிந்தார் பண்டு புகழ்மிகவே 98

1138 கண்டல் வேலிக் கழிசூழும் கடல்சேர்
நாகைக் காரோணம்
கொண்டே பதியாய் உயர்ந்து
குலவு சுந்தர விடங்கர்தாம்
அண்டர் பரவி நின்றிடவே
ஆழித்திரை போல் சுழன்றெழுந்து
தண்டா இன்பத் திருநடனம்
தாமும் புரிந்தே அருளுவரே 99

1139 தேடும் இயற்கை வளமுற்றுத்
திகழும் மறைக்கா டுதன்னில்
கூடும் புவனி விடங்கர்தாம்
குறளர் பாடித் தாளமிட
நீடும் குழலும் யாழுந்தான்
நின்றே யாண்டும் ஒலிகூட்ட
ஆடும் அம்ச பாதநடம்
ஆரா இன்பம் பெருக்கிடுமே 100

1140 திங்கள் திரியும் திண்சோலைத்
திருவாய் மூரில் வந்தருள்
மங்கை உமையார் இசைசேர்க்க
மணியார் நீல விடங்கர்தாம்
அங்கை மலரே கொண்டேத்தி
அடியர் கண்ணீர் சிந்திடவே
துங்க மிளிரும் கமலநடம்
துணையாம் என்றே ஆடுவரே 101

1141 கோட்டு ஞாழல் சுரபுன்னை
சூடும் திருநள் ளாறதனில்
மீட்டி வீணை குழன்மொந்தை
மேவுஞ் சீர்நக விடங்கர்தாம்
ஆட்டி அங்கை அசைத்தேதான்
அன்னை அஞ்சி நின்றிடவே
நீட்டி நிமிர்ந்துன் மத்தநடம்
நிகழ்த்துந்தகவு செப்பரிதே 102

1142 தமரம் மிகவே பல்லியமும்
தாளம் ஆதி நின்றோங்க
இமயு வல்லி உவகையுற
இயையும் மிடற்றுப் பாடலுடன்
கமலன் ஆதிசுரர்தொழவே கடியார்
பொழில் சூழ் காறாயில்
அமலன் ஆதி விடங்கன்றான்
ஆடுங் குக்குட நடனமுமே 103

1143 அஞ்சொல் ஓதி அரம்பைமார்
அரகர என்றே துதிசெய்ய
கொஞ்சுங் கிளிகள் மஞ்சனவக்
குயில்கள் கூவும் கோளிலியில்
விஞ்சும் துடியும் தண்ணுமையும்
விரவ அவணி விடங்கர்தாம்
பிஞ்சின் விழியார் உமைகாணப்
பிருங்கி நடனம் ஆடுவரே 104

(வேறு அறுசீர் விருத்தம்)

1144 மடமயில் பொழிலிலாட
வண்டினங் குழலிலாட
தடமிசை மகளிர் கூடித்
தண்புனல் குடைந்தே யாடி
அடல்மலி விசுவேசர்தம் அடியினை
தொழுதே ஏத்தும்
கடன்மலி பதியா மென்றே
கழறுவர் வட்டூர் தன்னை 105

1145 அன்னநற் பதித னக்கோர்
அருட்கொடை ஆகி நின்றார்
துன்னின் உடனோய் மாற்றித்
தொடர்ந்தெழும் உயிர்நோய் தீர்க்க
இன்னுயிர் முதல்வ னாரை ஏத்திட
வழியுஞ் செய்த
கன்னலின் மொழியா ரப்பா
முதலியாங் காவலன் றான் 106

1146 ஆடிடும் அண்ணல் பாதம்
அன்றிமற் றெவையும் ஓரார்
தேடிடு செல்வ முற்றுந்
திருப்பணிக் குதவு நீரார்
பாடுவர் இறைபுகழ்காண்
பயிலுவர் சித்த நூல்கள்
ஈடுதான் கூற யாரும்
இல்லையெம் தலைவ னார்தாம் 107

1147 குலவுசீர் கொள்ளோ லைக்கண்
கோயில்கொண் டருளி நின்ற
நிலவணி பிஞ்ஞகன்றன் நெஞ்சிடம்
அமர்ந்த போதும்
மலரவ னொடே அந்த
மாயனும் அறியா அண்ணல்
அலர்நகை வதனங் கண்டே
அமுதுணும் நீர்மை உள்ளார் 108

1148 வேதமோ டாகமங்கள் விதித்திடு
நியம மெல்லாம்
ஏதமே இயைந்த போதும்
இடையறா தியற்றும் நீரார்
ஆதியெங் கடவுள் மேலோன்
அனுதினம் நடமியற்றும்
காதலார் சிதம்ப ரத்தை
கைதொழக் கருத்தும் கொண்டார் 109

1149 சிறந்தநல் ஓரை தேர்ந்தார்
சிவன்கழல் மனத்துக் கொண்டார்
உறங்கிடா உளத்த ராகி
உற்றசீர் புதல்வ ராகி
அறம்புரி கந்தப் பாவை
அழைத்துமே கோயிற் குற்ற
திறந்தரு பணிக ளெல்லாம்
செப்பியே வைத்தார் பின்னர் *110*

1150 மணிவிளக் கொளியுங் கால
மகிபனார் அமளி சேர்த்தார்
திணியிருள் இரவும் நீண்டு
செல்லுமால் விழியும் மூடார்
அணிதரு தில்லைக் கூத்தன்
அவர்மன அரங்கி லேறித்
தணிவிலா இன்பம் நல்கித்
தாண்டவம் ஆடக் கண்டார் *111*

1151 அஞ்சொலின் அரிவை மார்தம்
அகமெனப் பரந்து பட்டு
வஞ்சகர் உளமே யென்ன
வளர்ந்திடு மிருளை உண்பான்
வெஞ்சமர் இயற்ற வெண்ணி
விரிக திர்க் கரங்கள் நீட்டி
கஞ்சமா வனிதை கேள்வன்
ககனத்தில் உதய மானான் *112*

1152 செறிதரும் இறக்கை கூறிச்
சேவல்கள் கூவி நிற்கும்
பொறிவரி வண்டி னங்கள்
புகுந்துபூந் தாதி லாடும்
வெறிதரு மலர்கள் நின்றும்
நிமிர்ந்தெழுங் கம்மென் வாசம்
அறிதுயில் நீத்து மாந்தர்
அரனடி வழுத்து வாரே *113*

1153 அருண்மலி அப்பா வள்ளல்
அருத்தியோ டெழுந்து போந்து
மருளகல் மனத்த ராகி
வருகடன் அனைத்தும் முற்றி
பொருளெனும் உடையார்
பூசை புரிந்துபின் கோயில் புக்குக்
குருபரர் விசுவே சர்தம்
குரைகழல் வழுத்தி மீண்டார் *114*

1154 உறுதுறை முகம்பு குந்தார்
ஓடமேல் ஏறிக் கொண்டார்
மறிதிரை மோது கின்ற
வாரிதி எல்லை தாண்டி
அறிதரு தென்னா டுற்றார்
அணிவுளர் தில்லை கண்டார்
செறிதரு பிறவி யாழி நீந்திடு
திறத்தார் தாமே *115*

1155 தில்லையைச் சென்ற டைந்தார்
செய்தவம் பலித்த தென்பார்
அல்லலும் அகன்ற தென்பார்
ஆடுவார் பாடு வாரால்
அல்லுறு கண்டத் தெம்மான்
அருளினை வாழ்த்து கிற்பார்
சொல்லிட வற்றோ அம்மா
தோன்றலார் உவகைக் கெல்லை *116*

(அறுசீர் விருத்தம்)

1156 சுரருலகைத் தொடவெழுந்த தூலலிங்கம்
நான்கினையும் தொழுது நின்றார்
பரவுதிருக் கலசங்கள் ஐம்பதிற்றின்
இரண்டவற்றுட் பயிலக் கண்டார்
விரவுதெற்கில் அன்னவணிக் கொடியினொடும்
மேற்கதனிற் குகையும் பார்த்தார்
மரபிலுயர் கிழக்கிலும் வடக்கிலும்
நடனமுத் திரைகள் கண்டார் *117*

1157 நட்டமிடும் நடராசர் இரகசியப்
பிரகாரம் நவில நின்ற
திட்டமுறு பத்திடப் பிரகாரம்
தென்முகத்துத் தெய்வ வீதி
சிட்டர்புகழ் சிவகங்கைப் பிரகாரம்
தேரோடும் திருவார் வீதி
மட்டவிழும் மாலைகட்டி விநாயகர்தம்
மறுகுகளும் மகிழ்ந்து கண்டார் 118

1158 தில்லையிலே சிவம்பயிலும் திருச்சபைகள்
ஐந்தினையும் தெரிந்து கொண்டார்
மல்லலுறு சிற்சபையே கனகசபை
வளர்நிருத்த சபையே மற்றும்
எல்லையில்சீர்த் தேவசபை இராசசபை
இவற்றையெலாம் எய்திக் கண்டார்
நல்லபரன் ஆங்கமர்த்தே உயிர்களுக்கு
நலம்புரியும் கருணை தேர்ந்தார் 119

1159 கருத்தகலாக் கணபதியே சுப்ரமண்யர்
கவினார்செங் கமலச் செல்வி
திருத்தகுசீர் இலிங்கமொடு சிறந்தொளிரும்
பாதுகையுந் தெரிந்து கொண்டார்
இருந்துபுகழ் சந்திரமௌலீச ரத்ந
சபாபதியை ஏத்தி நின்றார்
அருத்தமுறு சந்திரசே கரருடனாய்
வைரவரை அருச்சித் தாரே 120

1160 ஆனந்த நடமியற்றும் ஆதிபிரான்
அற்புதன்மெய் ஞான மூர்த்தி
தானெங்கும் வியாபகனாய்த் தழுவிநின்று
தலையளிதான் செய்வ னேனும்
தேனுந்து திருத்தில்லை அம்பலத்தே
செழும்பொன்செய் மன்றின் கண்ணே
வானுந்து தேவர்நரர் விலங்கிறைஞ்ச
நின்றாடும் வனப்பும் கண்டா 121

( வேறு )

1161 நித்தனை ஆயை ஆங்கே
நிருத்தமே தரிசித் தேத்தும்
வித்தகப் புலிக்கால் வேந்தை
வியன்பணிக் கிறையைக் கண்டார்
எத்துணைப் பிறப்பெ டுத்தும்
எய்தரும் பேறி தென்பார்
அத்தனாம் அப்பா பெற்ற
அனுபவம் அறைதற் பாற்றோ 122

1162 விழிகளெண் ணிலாத வேண்டும்
மெய்ந்நடம் காண்டற் கென்பார்
இழிபுனல் ஆற தாக ஈர்த்திட
அதனுள் வீழ்வார்
எழுதர உணர்வ தின்றி இறைவனுள்
அழுந்தி நிற்பார்
தொழுதகை சென்னி மேலார்
துரியமெய் நிலையி நின்றார் 123

1163 அம்பலத் தாடு மையர் அணிமலர்ப்
பதங்கள் போற்றி
உம்பரும் மகிழும் வண்ணம்
உற்றயாத் திரையும் முற்றி
செம்பொருள் தேர்ந்த அப்பா
சிதம்பரப் பதயி னீங்கி
பம்புசீர் வட்டூர் சேர்ந்தார்
பரிசனர் பரவி யேத்த 124

(வேறு கலித்துறை)

1164 வந்து புக்கவர் வளரெழில்
குலவிட நடஞ்செய்
எந்தை யார்திருப் படிவம
தியற்றியே அருளும்
சிந்து தந்திருத் தளியினில்
நிறுவிட விழைந்தார்
முந்து பல்பணி எவற்றையும்
முறையுடன் புரிந்தார் 125

1165 கருது காதலர் மகன்றனை
அழைத்துமே கனிவாய்
வருதி கூத்தனின் சிலைதனை
அமைக்கவல் விரைந்தே
சுருதி செப்பிடு திறனறி
தபதியார் தமையே
தருதி இன்றென நவின்றனர்
தகைமலி தலைவர் ***126***

1166 அன்பு விஞ்சிடு புதல்வரும்
அவருரைக் கியைந்தே
முன்பு குந்தனர் தபதியை
முறைமையால் வணங்கி
இன்பு மேவிடத் திருச்சிலை
இயற்றுநற் றினமும்
நன்கு தேர்ந்தபின் நயனுறு
தமதிலம் புகுந்தார் ***127***

1167 திருவி னாயகன் றிசைமுகன்
எனவிவர் தெரியா
உருவி னார்சிலம் பலம்பொலி
உளமிசை உணர்வார்
பெருகு மாசையால் தபதிசொல்
பிழையிலை என்பார்
மருவு சீரப்பா முதலிதன்
மகிழ்வுரைப் பரிதே ***128***

1168 சொன்ன வைகலும் புகுதரத்
துயில்விடுத் தெழுந்தார்
மன்னு சீர்க்கடன் எவற்றையும்
இயற்றியே மகிழ்ந்து
துன்னு நற்றளி புகுந்தனர்
சிவன்கழல் தொழுதார்
தன்ன தில்லிடை நுழைந்துமே
தனயனை அழைத்தார் ***129***

1169 பேடகந்தனைத் திறந்துமே
பெருகுமன் புடனாய்
ஆட கந்தனை எடுத்தனர்
மகனிடத் தளித்தார்
சேட ஏகிநீ தபதியில்
குறுகியே நடந்தான்
ஆடு கூத்தனார் சிலைத்தொழில்
முற்றுகென் றறைந்தார் 130

(வேறு அறுசீர் விருத்தம்)

1170 தந்தைசொல் தலைமேற் கொண்டே
தகைமலி மைந்த னாரும்
அந்திவான் செக்கர் மேனி
அண்ணலைத் தொழுது வாழ்த்தி
வந்திடு காளை பூண்டு
வயங்குநற் பாண்டி லேறி
நந்துசீர் துணையுங் கூட
நகரினை நோக்கிச் சென்றார் 131

1171 கயலினங் குதித்துத் துள்ளக்
கண்டதைக் குருகு மேவ
அயலினின் மறைந்து போகி
அடம்பினுள் மாறி வைகும்
வியலுற கழனி நீங்கி வியன்தெரு
பலக டந்து
பயில்தரு நகரம் புக்கார்
பண்புறு நம்பி தானே 132

1172 ஆங்கிவர் நண்ணு காலை
அடைந்தவர் பவநோய் மாற்ற
ஈங்குமே அவத ரித்தார்
ஏவரு மேத்துஞ் சீரார்
நீங்கரும் அருளும் மிக்கார்
நேரெவர் யாரு மில்லார்
ஓங்குசீர் யோகச் சித்தர்
ஒருபுறம் நிற்றல் கண்டார் 133

1173 வண்டிநின் றிழிந்து போந்தார்
வருசெயல் தனைம றந்தார்
மண்டிடு மன்பு விஞ்ச மனமுமே
முந்திச் செல்ல
கண்டவர் அடியில் வீழ்ந்தார்
கைத்தலஞ் சிரசின் மேவக்
கொண்டுமே பணிந்து நின்றார்
குனிப்புறு கந்த வேளே 134

1174 "ஏதடா கந்த வேளே
நின்வர வெண்ணி வெண்ணி
ஓதிடு கம்மி யன்றான்
உவகையிற் காத்தி ருந்தான்
வேதநா யகனாங் கூத்தன்
மேவிடு சிலைவ டிப்பான்
போதடா விரைந்தே" என்னாப்
புகன்றுமே சித்தர் போனார் 135

1175 எண்ணுவார் புதுமை யீதால்
இழிதரும் ஆறாய்க் கண்ணீர்
அண்ணலார் அருள்வி யப்பார்
ஆனந்த வயத்த ரானார்
நண்ணினார் கருமான் இல்லம்
நடந்தவை புகன்று வைத்தார்
பண்ணுநல் அமிர்த முண்ட
பண்ணவர் நீர்மை யுற்றார் 136

1176 செம்பொனைச் சேர்த்து ருக்கிச்
சிலைதனை வடிக்கும் வேலை
அம்பிகை பாக னாரின்
அருளினால் நிறைந்த தாக
இம்மெனக் கந்த வேளும்
இனியநல் விடையுங் கொண்டே
தம்மனை நோக்கி மீண்டார்
தந்துணை கூடத் தானே 137

1177 தந்தையாம் அப்பா பாதம்
தகையுடன் வணங்கிப் பின்னர்
இந்துவாழ் சடையெம் பெம்மான்
இன்னருள் தானுங் காப்ப
முந்துசீர் யோக சித்தர்
மொழிந்தவை முதல தாக
அந்தநற் றபதி செய்த
அனைத்தையும் வகுத்துச் சொன்னார் 138

1178 தனயரும் தந்தை யாரும்
தருகிளை மற்றுள் ளோரும்
கனகநீண் மன்றி லாடி
கணங்குழை சிலைகள் காணும்
தினமதும் என்றோ என்னாத்
தெரிகிலர் தவித்து நின்றார்
மனநிறை யுடனாய்ச் சிற்பி
மறுமொழி விடுத்தாரம்மா 139

1179 முடங்கலும் உற்ற தாக
முற்றுநல் அன்பி னோடு
நடம்பயில் பெருமான் றன்னை
நண்ணியே கொணர்வான் வேண்டிக்
கடம்பயில் காளை மார்கள்
சிலரையும் கடுகக் கூட்டி
இடம்பெறு பல்லக் கோடும்
ஏகினர் தபதி இற்கே 140

1180 துங்கராம் அப்பா சொற்ற
சுவையுறு கதைகள் கேட்டே
இங்கிருந் தேகி னோர்கள்
ஏவரும் இளைப்பே இன்றி
தங்குசீர்த் தபதியாரில்
தாமும் வந்தடைந்தா ராக
அங்கவர் கண்ட கோலம்
அறைதரு தன்மைத் தன்றால் 141

1181 மன்னுசெஞ் சடையிற் கங்கை
மதியுடன் அரவு கண்டார்
துன்னுசீர் நெற்றி யாங்கண்
துகளறு திலகம் பார்த்தார்
வன்னவான் புருவங் கோட்டி
வந்தெழு முறுவல் தேர்ந்தார்
பன்னுமுக் கண்கண் மீது
படரொளி பரவக் கண்டார் 142

1182 பொங்குசீர்ச் செவியிற் சங்க
குண்டலம் பொலிந்து தோன்றும்
அங்கையில் உடுக்கை அங்கி
அரவுடன் அசைந்து நிற்கும்
பங்கமில் வரதத் தோடும்
பகர்கரம் அபயம் தோன்றும்
தங்கநாண் அரையின் மீது
தரித்திடு புலித்தோல் விஞ்சும் 143

1183 முயலகன் மீதி லூன்றி
மிதித்திடும் பதத்தி னோடும்
இயலுறு மடியற் காக
எடுத்தபொற் பாதம் தோன்றும்
வியலிடம் பரந்த ளாவும்
விரிகழல் சிலம்புங் கூடும்
மயலகல் நடனங் காட்டும்
மாபரன் நிற்பக் கண்டார் 144

1184 எண்ணிலாக் கால மெல்லாம்
இருண்மல மறைப்ப மூடி
கண்ணிலா இடரு ழந்து
கருவினுட் பயின்று மாயும்
மண்மிசை உயிர்க்கட் கெல்லாம்
வளர்சிவ ஞானம் நல்கும்
தண்ணருட் சிவகா மித்தாய்
தந்திருப் படிவங் கண்டார் 145

1185 பிரணவம் என்ன நிற்கும்
பெருந்திரு வாசி காண்பார்
வரமலி ஒளியை யுள்ளே
வழுங்கிடு நீர்மை தேர்ந்தார்
பரவுசீர்க் சுடர்கள் ஐம்பான்
மூன்றவை பரந்தி லங்க
அரவணி கூத்த னோடும்
அம்மையை அதனுட் கண்டார் 146

1186 சென்றிடும் அப்பா வந்தான்
சேவித்துத் திருவா சிக்குள்
நின்றிடு கூத்த னோடு
நேயமார் அன்னை தன்னைத்
துன்றிடு கோசி கத்தால்
மூடியே தூக்கு வித்து
நன்றுமே பல்லக் கேற்ற
நண்ணினர் வட்டு டீக்கே 147

1187 சித்திரச் சிலைக டம்மைச்
சேர்ந்தநன் முகூர்த்த மொன்றில்
உத்தமக் குரவர் வேதம்
ஓதியே கிரியை காட்ட
வைத்துமே விழவெ டுத்தார்
வானவர் மலர்சொ ரிந்தார்
இத்தலத் தென்றும் இல்லா
இன்பமும் மலர்ந்த தம்மா 148

1188 கூத்தனார் பிரதிட் டைதான்
கூடிடு கலியு கத்தில்
ஏத்துமை யாயி ரத்தோ
டியைந்திடு மிருபா னெட்டில்
ஆத்தமார் அட்ச யப்பேர்
ஆண்டுசித் திரையின் கண்ணே
பூத்தநல் அன்பி னோடு
பொலிவுற நிகழ்ந்த தென்பார் 149

1189 வண்டுகள் மலர்கு டைந்து
மதுவினை மாந்தி நின்று
தண்டமிழ்க் கீதம் பாடும்
தண்டலை வட்டு ராங்கண்
அண்டரும் அருத்தி கொள்ளும்
ஆலயம் புக்கு நின்று
மண்டுசீர் அன்பால் அப்பா
மதுரகீ தம்மி சைப்பார் 150

1190 மால்விடை யூர்தி யானே
மருவலர் புரங்கள் மூன்றும்
கோலினால் அன்றி நின்றன்
குறுநகை கொண்டு செற்றாய்
பாலன மொழியா ளோடும்
பரம்பர வட்டூர் போந்தாய்
கோலமார் கொள்ளோ
லைக்கண் கூத்துநீ இயற்று கின்றாய் 151

1191 கூத்துநீ இயற்றி நின்று
கோளரா கையிற் பூண்டு
சாத்தியே உழுவைத் தோலைச்
சந்ததம் மகிழ்வ தென்னே
ஏத்துசீர்ப் பொழில்கி ளைத்தே
எழில்வளர் வடூர் எந்தாய்
ஆத்தனே நின்னை அன்றி
ஆர்துணை அறையும் ஐயா 152

1192 அழைகழல் சிலம்பு பூண்டாய்
அரியயன் முன்னர் நீயும்
நிறைதரு சோதி யாகி
நிமிர்ந்தனை அன்றோ தேவே
நறைமலர்க் கொள்ளோ லைக்கண்
நண்ணினை நடமும் கொண்டாய்
குறையினி எமக்கு முண்டோ
கூத்தனே சரண மையா 153

1193 சரணமென் றடைந்தார் தங்கள்
சஞ்சலம் அகற்று வாய்நீ
பரவுசீர் அண்ட மூடு
பரந்தெழு சோதி நீயே
குரவுவார் சடையி னானே
கோதையாள் பங்கி னானே
விரவுசீர்க் கூத்தா நேயா
வினையெலாந் தீர்ப்பாய் போற்றி 154

1194 நேயனே போற்றி எங்கள்
நிருத்தனே போற்றி போற்றி
ஏயநின் றுணையி ருப்ப
எழுபிறப் பெதற்கும் அஞ்சேன்
நாயினேம் பொருட்டாய் வட்டூர்
நலமலி கொள்ளோ லைக்கண்
வேயன தோளி யோடும்
மேவினை போற்றி போற்றி 155

(துரவுக் கொச்சகம்)

1195 அடித்தொண்டர் பொருளிழந்தே
அவலத்து எழுந்துவேளை
முடித்திட்ட சடையுடனாய்
முகமதிலே நகையுமாட
பிடித்திட்ட அனலினொடு
பிறங்கிடுநற் றுடியுமாட
நடித்திட்டே அபயமுடன்
நல்லருளும் புரிவனையன் 156

1196 கண்ணுதற்கூத் துடையபிரான்
கனவினிலே புகுந்தருளி
வண்ணமுறு மாலைதனில் வள்குஞ்ச
மிரண்டு சேர்த்திப்
பண்ணியெமக் கணிதிரென பரிவுடனே
பணித்த வண்ணம்
எண்ணியதை இயற்றுவரால் இனிதாக
இன்றுமேதான் 157

(வேறு அறுசீர் விருத்தம்)

1197 வற்றா அருள்சேர் விசுவேசர்
வந்தென் நெஞ்சத் தமர்ந்ததனால்
கற்றா ரிகழும் சிறுமையினேன்
கருதும் நூல்கள் பயிலாதேன்
முற்றாத் திங்கள் முடிக்கணிந்து
முழவின் ஒலிசேர் பொற்சபையில்
உற்றே யாடுந் திருக்கூத்தன்
சருக்கந் தன்னை உரைத்தனமே *158*

(வேறு)

1198 மற்றும் இனியே பண்ணைதொறும்
மருவு நெய்தல் தாமரைகள்
உற்ற காதன் மடமின்னார்
ஒளிசேர் நயன வதனமெனாய்
பற்றி இளவே றணையார்தாம்
பரியா தகலும் வட்டூரார்
வற்றாவிழவை அயர்சருக்கம்
வரைந்து சிறிது கூறிடுவாம் *159*

கூத்தப்பிரான் சருக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 1198

உ

சிவமயம்

## அருள்புரி காண்டம் ஐந்தாவது

## விழாவயர் சருக்கம்

(அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்)

1199 பொன்னென இலங்கும் செய்ய
புரிசடை விசுவேசர்தம்
இன்னருள் சுரந்து தூண்ட
எழுந்திடும் இச்சை தன்னால்
அன்னவன் அடிவழுத்தி அடியவர்
விழாவ யர்சீர்
மன்னிய சருக்க மிங்கண்
மகிழ்வுடன் உரைத்து மன்றே 01

1200 அரனுறை ஆலயங்கள் அனைத்திலும்
ஆற்ற வேண்டும்
வரமலி யுற்ச வங்கள்
வகுத்திடின் மூன்றுண் டாமால்
விரவிடு நித்தி யம்மே
விளங்குசீர் மகோற்ச வம்மே
பரவிடு காமி யம்மாய்ப்
பகருவர் அவற்றைத் தாமே 02

1201 நாள்வழி பாட்டின் கண்ணே
நண்ணிய வழுக்கள் யாவும்
மீள்திறங் கருதி நின்றே
மகோற்சவம் இயற்று கிற்பார்
நீள்பொருள் இட்ட சித்தி
நேடியே காமி யந்தான்
தோடுடை ஈசனார்க்குத்
துரிசின்றி ஆற்று வாரே 03

1202 வந்துயர் பூசைக் கண்ணும்
வளர்மகோற் சவத்தின் கண்ணும்
அந்திவான் மேனி அண்ணல்
ஐந்தொழில் ஆற்று கின்றான்
முந்துசீர் அவற்றை நித்ய
மாபஞ்ச கிருத்தி யம்மாய்
அந்தமில் மறைகள் தாமும்
அறைந்திடும் பரக்கத் தாளே 04

1203 வட்டுமா நகர்க்கொள் ளோலை
வான்திருப் பதியி னுள்ளே
சிட்டார் இயைந்து கூடிச்
செய்திடும் உற்ச வங்கள்
மட்டில ஆங்க வற்றுள்
மாண்புமிக் குடைய வென்ன
இட்டமோ டியம்புங் காலை
இரண்டுதாம் சிறந்த வன்றே 05

1204 பண்டைநாள் விசுவே சர்க்குப்
பரவுசித் திரைமூ லத்தில்
கொண்டசீர்க் கொடியுயர்த்திக்
குலவுநல் விழாவெ டுத்தார்
மண்டிடும் அன்பாற் பின்னர்
வந்தஆனிப்ப ரணிநாள்
கண்டுமே தொடக்கி மேய
தீர்த்தமுத் தரத்தே செய்தார் 06

1205 வித்தக விசுவே சர்க்கு
விருப்பொடு தொழும்பர் தாமும்
சித்திரைத் திங்க ளாதி
திகழ்மதி பன்னி ரண்டில்
பத்தியோ டுற்ச வங்கள்
பற்பல இயற்று கின்றார்
அத்திறத் தவற்றுட் சில்ல
அருத்தியின் அறைது மன்றே 07

1206 சந்திர சேக ரப்பேர்
தரித்துயர் சிவப ரர்க்குச்
சுந்தரித் தாயார் மேவத்
துய்யசீர் உற்ச வம்தான்
நந்துசித் திரைமா தத்தில்
நவிலுசித் திரை நன் னாளில்
முந்திடும் அன்பி னோடும்
முறைமையால் எடுப்பர் நன்கே 08

1207 கணமலி பூதர் தாமும்
களிப்புடன் மருங்கில் நிற்ப
நிணமலி இலைவே லேந்தி
நின்றருள் விசுவே சர்க்கே
குணமலி மேடந் தன்னில்
கூடிடு பரணி நாளில்
மணமலி கோல மென்னா
வழங்குமுற் சவமுங் கொள்வார் 09

1208 சிறுவிதி இயற்று வேள்வி
சிதைத்துமே விண்ணோர்க் கெல்லாம்
உறுமுறை தண்டம் நல்கும்
உக்கிர பத்தி ரர்க்கு
மறுவறு வைகா சிக்கண்
வருமுதல் வெள்ளி யன்று
பெறுமுறை மடையி யற்றிப்
பேசுமுற் சவமுங் கொள்வார் 10

1209 வாடிடு பயிருக் கின்ப
வான்மழை என்ன மேவி
ஏடிடு கொன்றை வேணி
இறையவன் பங்கி னாட்கிங்
காடியிற் பூர நாளில்
அருள்முழுக் காற்றி வைத்தே
ஈடிலா விழாவி யற்றி
எண்ணிடு பேறு கொள்வர் 11

1210 மண்டிடும் அன்பாற் கல்லே
மருவுசீர்த் தெப்ப மாக
எண்டிசை பரவ அப்பர்
இருங்கரை சேர்ந்த ஞான்று
அண்டிய ஆடித் திங்கள்
அமாவாசி கூடு வைகல்
கொண்டசீர் விழவு மாற்றித்
தீர்த்தமுங் கூட்டு வாரே 12

1211 வரமருள் பதங்கள் நோவ
மதுரைமா நகரி லன்று
துரகமுங் கொண்ட ணைந்த
தூமதி வேணி யார்க்குப்
பரவுமா வணிமூ லத்தே
பயிலுநல் வைகல் தன்னில்
விரவுசங் காபி டேகம்
விழைந்துமே செய்வர் தாமே 13

1212 நலந்தரு கன்னித் திங்கள்
நண்ணுமொன் பானா மெல்லி
வலந்தரு துர்க்கை செந்தா
மரைவளர் செல்வி வாணி
இலங்குநல் அருளை வேண்டி
ஏவரும் இனிதே கூடி
கலங்கஞர் அகலத் தானே
கருதுநல் விழாவெ டுப்பார் 14

1213 தக்கதாம் தசமி தன்னில்
தற்பாரை துர்க்கை யாரும்
மிக்கபேர் வலிப டைத்த
மகிடனைப் பொருதெ ழுந்து
புக்கவன் எதிர்த்து மேலும்
மாயைகள் புரிந்தா னாக
அக்கணம் அவனை வென்ற
அருட்செயல் காட்டு வாரே 15

1214 ஐப்பசி மதிய டுப்ப
அறுமுக வள்ளற் காய
ஒப்பிலாக் கந்த சட்டி
உற்சவம் இனிதெ டுப்பார்
திப்பிய மான கந்த
புராணமும் கேட்டு வப்பார்
செப்பரும் உபவா சந்தான்
சிரத்தையோ டினிது நோற்பார் 16

1215 மும்மல வாதை யாலே
முட்டுறும் உயிரை யீசன்
அம்மலங் கழுவி வைத்தே
ஆட்கொளு நீர்மை தன்னை
எம்முனே புகட்ட வெண்ணி
எடுப்பரே சூரன் போரை
நம்மினால் ஒன்றிங் குண்டோ
நாயகன் அருளே எல்லாம் 17

1216 கார்த்திகை யடுத்து விட்டால்
கருதுசீர்த் திங்கள் வாரம்
தீர்த்தனைச் சிவனை முக்கட்
செல்வனை இனிதே ஏத்தி
கூர்த்திடு சோம வார
நோன்பினை நோற்று நிற்பர்
போர்த்தமெய் அன்பி னாலே
பொருந்துபேர் இன்பம் காண்பர் 18

1217 அலகிலா அருளி னாலே
அம்பலக் கூத்தன் முன்னாள்
வலமுறு பதஞ்ச லிக்கும்
வியாக்கிர வள்ள லுக்கும்
நலமுற ஆடிக் காட்டும்
நற்றிருக் கூத்தைத் தானும்
நிலவுதைப் பூச நாளில்
நேரினிற் காண லாமே 19

1218. செந்தமிழ் முருக னுக்குச்
சிறந்துயர் விழாக்க ளுள்ளே
வந்ததைப் பூசந் தானும்
வழுத்திடச் சூரிய தோன்றாம்
அந்தநல் எழிற்கோ லத்தை
ஆசிலாக் கொள்ளோ லைக்கண்
இந்தநன் னாளிற் காண்டல்
எல்லையில் இன்பம் கூட்டும் 20

1219. மாலொடும் அயனார் காணா
மாதொரு பாக னார்தாம்
வாலிதாம் சோதி யாகி
வளர்ந்தெழு கோலந் தன்னை
சாலவே நான்கு சாமம்
தன்னிலும் தொழலாம் மாசி
மேலதாம் சிவ நிசிக்கண்
மிக்குயர் உற்ச வத்தே 21

1220. பன்னகல் பாயல் கொண்ட
பராபரன் விண்டு வுக்கு
கன்னலே தேனே பாலே
கலந்துசெய் அருள்மு ழுக்கை
துன்னுபங் குனியாம் திங்கள்
தோன்றுமே காத சிக்கண்
முன்னியே செய்வ ராமால்
முடிவிலா இன்பம் கூடும் 22

1221. சித்திரை ஓணம் ஆனி
திகழுமுத் தரமே தாவில்
அத்தனு ஆய்ந்து கூறின்
ஆதிரை மாசி மற்றும்
சுத்தமாஞ் சிங்கம் கன்னி
சொல்சதுர் தசியாம் பூர்வம்
உத்தரெங் கூத்தர்க் காய
அபிடேக தினங் கடாமே 23

1222. ஆறென அமைந்து நின்ற
அருள்முழுக் குற்ச வத்தைப்
பேறென எண்ணி வட்டூர்ப்
பெருங்குடி வாணர் தாமும்
ஏறணி கொடிகொ ளீசர்
எழுந்தருள் கோயில் புக்கு
மாறிலா மனத்த ராகி
மகிழ்வொடு பணிவர் தாமே

1223. இயற்கையின் எழில னைத்தும்
இயைந்துயர் வட்டூ ரின்கண்
வியக்குநல் விதத்தின் மேய
விசுவேச்ச ரத்தின் மாட்டு
நயப்புறும் உற்ச வங்கள்
நவின்றனம் சிலதாம் ஈங்கு
மயக்கற நடக்கும் சீர்த்தி
மகோற்சவ இயல்பு சொல்வாம் 25

1224. ஆண்டுதோ றாற்று கின்ற
ஆனிமா மகோற்ச வத்தை
ஈண்டுமே புகலு முன்னே
இறையவர்க் குரிய தென்னா
பூண்டபேர் அன்பி னாலே
புலமையோர் புகன்று வைத்த
நீண்டசீர் ஆதி ரைநாள்
நீர்மையுஞ் சிறிது சொல்வாம் 26

(வேறு அறுசீர் கழிநெடில் ஆசிரிய விருத்தம்)

1225. மண்ணோர் ஏத்தும் மார்கழிதான்
வளரும் வானின் விபுதர்க்கும்
எண்ணின் புலரிப் போதாகும்
இமையோர் யாரும் புவிபோந்து
வண்ண வயலார் கொள்ளோலை
மருவுந் தளியுள் வந்துற்றுத்
தண்ணென் கடிமா மலரிட்டுத்
தாழ்ந்து பணிந்தே வணங்குவரே 27

1226. இலகும் வட்டூர் உறைநல்லோர்
எழுந்தே புலரி நீராடி
அலரும் முகையும் கொண்டெய்தி
அன்பாற் பள்ளி எழுச்சியுடன்
குலவும் பாவை இனிதோதி
கோயில் போந்தே அருச்சித்து
நிலவும் இல்லம் மீள்தருவர்
நெஞ்சம் உவப்பர் நிறைவுடனே 28

1227. நாடி இல்லின் அயல்முற்றும்
நன்கு பெருக்கித் தூய்மையொடு
நீடு வாசல் முன்னாக நேடி
மெழுக்கும் இட்டே தான்
கூடும் கோலம் குயிற்றினராய்
குலவும் பிள்ளை யார்வைத்து
பீடு சிறக்க மலர்சாத்தி
பெருகும் அன்பாற் பணிகுவரே 29

1228. திருவார் கன்னிப் பெண்களெலாம்
தேவ தேவன் புகழ் பாடி
உருகும் உளத்துத் தோழியரை
உற்றே யழைத்துத் துயில்நீத்தே
வருதிர் என்றே உடன்கூவி
வளரும் நோன்பும் ஆற்றுவரே
திருவெம் பாவைப் பூசைதனைச்
சேவித் திடுவே வாழ்வுயரும் 30

1229. வல்லோன் ஈசன் தளிதனிலே
வந்து பூசை நிறைவின்பின்
அல்லார் கண்டன் அருள்பெற்ற
அண்ணல் வாத வூரர்சீர்
சொல்லும் புராணம் அதுதன்னை
ஓதித் துயர்கள் போக்கிடுவார்
இல்லந் தோறும் வாசகத்தேன்
இசையும் பெருகிப் பரவிடுமே 31

1230. ஐயம் இல்லா ஆறுயுகல்
அறவோர் திருவெம் பாவைதனை
வெய்ய பவநோய் மாற்றியருள்
விமலை தனக்கிங் குதவிடவே
துய்ய வொன்பான் சத்தியரைத்
துயினீர் விடுமின் எனவேண்டும்
மெய்யாஞ் செயலே அதுவென்னா
மேவும் பொருளும் கொள்வாரே 32

1231. ஒரும் திருவெம் பாவையதும்
உற்ற ஒன்பான் நாளதிலே
தேரூர் விழவும் வந்திடுமால்
திருவார் வீதி தனிலாங்கே
காரார் மூன்று கிரியசையும்
காட்சியென்ன அவையுலவும்
பாரந் தாங்க இயலாளாய்
பரிந்தே நிற்பள் படிமங்கை 33

1232. ஒன்பான் ஃவகல் நாழிகையும்
ஒன்பான் இரட்டி உற்றிடலும்
இன்பான் நான்கா றெய்துவரை
இலங்கா திரையாம் நாளெழ
அன்பான் நடமும் ஆடுமருள்
அரையர்க் கிங்கண் அபிடேகம்
துன்பான் நலியா வகையுயிர்கள்
தொல்லை விதியின் இயற்றுவரே 34

1233. பரிதி உதயம் ஆகிடுமுன்
பண்ணும் பூசை வழிபாடும்
உரிய முறையின் இனிதியற்றி
உற்ற விழவும் அயருவரே
தெரிதின் ஆன்ம கோடியிவை
தெரிசித் திடினே வெம்பவநோய்
இரியும் என்ன மறைநூல்கள்
இயம்பும் ஈங்கண் இனிதேதான் 35

1234. கண்ணார் நுதலோன் அருட்கூத்தன்
காத லுடனாய் முன்னாள்
தண்ணார் தெரியற் சிவகாமித்
தாயோ டுயிர்கள் நலமுறவே
பண்ணார் தில்லைப் பரவெளியில்
பம்பை தாளம் மிகமுழங்கத்
திண்ணார் தோள்கள் வீசிநடஞ்
செய்த கோலம் கண்டிடலாம் 36

1235. ஆடல் அரையன் ஆதிரைநாள்
அன்பான் அடியர் நடமிடுவர்
நாடற் கினிய கொள்ளோலை
நாதா அருளென் றேத்திடுவார்
தேடற் கினிய பெம்மானே
செய்யாய் அருளென் றழுதிடுவார்
கூடற் பதியாய் தில்லையனே
கோவே கூத்தா சரணென்பார் 37

1236. தேடுஞ் சங்குஞ் சச்சரியும்
திசைக டோறும் மேவிடுமே
நீடுந் துடியும் தண்ணுமையும்
நின்று முழங்கும் புடையெங்கும்
கூடும் கொவ்வை வாய்ச்சியர்தாம்
கொட்டும் தாள வொலியோங்கும்
பாடும் அடியர் சும்மையதும்
பரவும் விண்ணின் புடைதானே 38

1237. தொல்லை அகல ஆதிரையாம்
தூய நோன்பு நோற்றோர்கள்
வல்ல உபவா சந்தானும்
வகையாய் காத்து வருமன்பர்
சொல்லும் ஏழை செல்வரெனத்
தூக்கா தெவர்க்கும் அமுதருத்தி
எல்லோர் தாமும் இன்புறவே
இனிதே ஆற்றி மேவுவரே 39

(வேறு அறுசீர் விருத்தம்)

1238. சீருயர் மகோற்ச வத்தைச்
செய்கொடி யேற்றத் தோடும்
ஏருயர் தீர்த்தம் பின்னாய்
இயைதர யாக மற்றும்
பேருயர் பலியும் நல்கிப்
பிறழ்விலா வகையிற் செய்தல்
நேருயர் சாகல் யம்மாய்
நிகழ்தலும் உண்டு தானே 40

1239. அங்குரார்ப் பணமே யாதி
ஆக்கலுள் அடங்கும் மேலுந்
தங்குசீர் வாக னாதி
தகவுயர் காத்த லாகும்
துங்கமார் தேர்து டைத்தல்
சூரண மறைத்த லோடும்
பங்கமில் தீர்த்த முந்தான்
பகருவர் அருள லென்றே 41

1240. அருள்பொழி விசுவே சர்க்கும்
ஆனியுத் தரவி ழாவைப்
பெருகிடும் ஆர்வத் தோடும்
பிறங்குபல் கோத்தி ரத்துள்
வருதரு குழுக்கள் கூடி
வகைவகை இணைந்து நின்று
உருகுபே ரன்பி னோடும்
உஞற்றுவர் இனிது தானே 42

1241. இனியநல் விழாவைக் காண
ஈழத்தின் பலபால் ஏகி
மனிதநன் நேயத் தோடு
மாண்டகு தொழிலி யற்றும்
இனநலம் பேணும் மாந்தர்
எழில்றவழ் முகத்த ராகி
மனநிறை வுடனாய் வட்டூர்
வந்துமே குவிவ ராலோ 43

1242. ஊரெலாங் கூடிப் போந்தே
உவப்புடன் இல்லம் எல்லாஞ்
சீரொடும் தூய்மை செய்வார்
சேர்ந்திடு பக்கல் முற்றும்
ஏருறச் சுத்தி பண்ணி
ஈசனார் கோயிற் பாங்கர்
நேருறு வீதி யாவும்
நினைந்துமே கோலஞ் செய்வார் 44

1243. நஞ்சணி கண்டர் கோயில்
நாடியுட் புகுந்து நின்று
விஞ்சிடு சுதையும் பூசி
வேறுள அனைத்துஞ் செய்தே
அஞ்சொலின் அரிவை மாரும்
ஆடவர் தாமுங் கூடி
தஞ்சநீ என்று வாழ்த்தித்
தளமெலாங் கழுவிவைப்பார் 45

1244. விண்ணவர் ஊரோ வில்லை
விரிபுகழ் அழகை யென்ன
கண்ணினால் காண்டற் கொண்ணாக்
கவினுள வனைத்தும் செய்வார்
மண்மிசைப் புகழே மிக்கு
வளர்ந்துயர் விசுவேச் சரத்தை
உண்ணிகழ் அன்பு விஞ்ச
உவந்துமே கோலஞ் செய்வார் 46

(தரவுக் கொச்சகம்)

1245. மிடிதீர்த்துத் துயரகற்றி
வினைமாசு கழுவியருள்
வடியேற்று மழுவுடையான்
வதிந்துவக்குந் திருத்தளியுள்
கொடியேற்று நாளதன்முன்
கொளத்தகுநற் பணியெல்லாம்
அடியார்கள் புகுந்தெய்தி 47
அமைதியுடன் இயற்றுவரே

1246. பூர்வாங்கக் கிரியையெலாம்
பொருணூல்கள் புகன்றவை
சீர்தூக்கி நனியியற்றித்
திருவிழவும் இனிதியல
ஊர்சாந்தி உறுகவென
ஓதுபுகழ் வயிரவர்க்கு
நேர்தருநல் பூசைபலி
நிகழ்த்துவரே அருட்குரவர் 48

1247. அன்னதன்பின் அடைவுடனே
அவனியினுக் கதிபதியாய்
மன்னிவரு பிரமனொடு
மறையினுக்குத் தெய்வதமாய்த்
துன்னிவரு மிந்திரனைத்
துதித்தின்பு நிலவுகென
பன்னுவாஸ்து சாந்தியதை
பண்ணுவரே பகருங்கால் 49

1248. ஐந்தொழிலின் தெளிவெனவே
அமைந்திடுசீர் மகோற்சவத்தில்
முந்திவரு படைத்தலென
மொழியநின்ற முளையிடலை
வந்தபெரு மறைபுகலும்
வகைகண்டு மண்கொண்டு
தந்திடுவர் அதுதானும்
தாவிலங்கு ராரப்பணமால் 50

1249. தேவதளி இடத்துளவாம்
திருச்சிலைகள் உடனாக
ஆவலுடன் விழவியற்றும்
அருட்குரவர் மற்றுமுள
காவலராம் கருத்தாவாம்
என்றின்ன பேர்க்கெல்லாம்
மேவருசீர்க் கடிநாணும்
மிகுகளிப்பிற் பூட்டுவரே 51

1250 உற்றவுயர் முழுத்தமதும்
எய்திடவே உவகைகொடு
நற்றிறஞ்சேர் கருத்தாவின்
நவையில்பே ரில்நின்றும்
அற்றமதில் கொடிச்சீலை
யதுகொண்டு தளிபுகுவர்
குற்றமிலா வாத்தியங்கள்
குழுமியிசை இயற்றிடுமால் 52

1251 திருக்கோயில் வந்தடைந்த
துவசமதை மந்திரித்து
விருப்போடு வழிபட்டு
விளங்குபல கிரியைசெய்து
கருப்புரத்தின் ஒளிகால
கருதுநறும் புகைபரவத்
திருத்தம்ப மிசையேற்றி
கால்கோளும் கொள்ளுவரே 53

1252 கால்கோளும் இயன்றபின்னே
கடம்புரியும் குருமூர்த்தி
ஆலமருஞ் செல்வரொடும்
அனைத்துளராம் மூர்த்திகட்கும்
கோலமலி காவலர்க்கும்
அடியருக்கும் ஆசிசொலி
சீலமலி யூர்நாடு சிறக்கவென
வாழ்த்துவரே 54

1253 ஏத்திடுசீர்க் கொள்ளோலை
எழுதளிக்கண் விழாவைகல்
ஆத்தியணி வேணியனார்க்கல்
கடித்தொண்டு புரிதிரெனா
தோத்திரித்து நின்றேதான்
துணைக்கரமும் சிரத்திருத்திக்
காத்தருளும் நவசந்திக்
காவலரை வேண்டுவரே 55

1262 ஓங்கிடுநீர் முதுகடலோ
உம்பருறை பதிதானோ
வீங்கிடுசீர் காஞ்சிகொலோ
விரவுபுகழ் வாரணையோ
தேங்குமிசைத் தில்லையதோ
திசையளந்த மதுரைகொலோ
பாங்குறுசீர் வட்டூரின்
பரிசதுதான் உரைப்பரிதால் 64

1263 அருள்குலவும் அபிடேகம்
அலங்காரம் அவற்றுடனாய்ப்
பொருள்குலவும் அருச்சனையே
தீபமவை பொருந்திடவே
மருளகற்றும் திருமுறையே
வாழ்த்தாதி மொழிந்ததன்பின்
இருளகற்றும் உற்சவர்தான்
அகவீதி எய்துவரே 65

1264 விக்கினங்கள் தீர்த்தருளும்
விநாயகரும் வீரபத்ர
உக்கிரரும் சுப்ரமண்ய
உயர்குகனும் ஓவறுசீர்
அக்கணியும் கூத்தனொடு
சிவகாமி அனைதானும்
நக்கனுடன் நவில்சண்டி
நாதனுமங் குறுவராமே 66

1265 யாகாதி முடித்துப்பின்
கட்டியமுங் கேட்டுவந்து
வாகாகக் கூத்தனொடு
மற்றுளரும் தேரமர்ந்து
மோகாதி கடிந்தருளி
முறையினொடும் வேண்டினர்க்குப்
போகாதி உதவிடவே
புறவீதி புகுவராமே 67

1266 அணியான நெடுவீதி
அன்புவடம் பிணித்தடியர்
திணிதாய காதலுடன்
தேரதனை ஈர்த்திடுவர்
கணபதியே வீரபத்ர
காளியரும் அமர்ந்தருளப்
பிணியாய புறங்கொடுப்ப
புகுதுவரே வெளிவீதி 68

1267 அடுத்தேதான் உவட்டெடுப்ப
அருணிலவும் அகலிடத்தில்
தொடுத்தேதான் சிவகாமித்
துடியிடையாள் அயல்காப்ப
எடுத்தகரம் அமைந்தகரம்
இவற்றுடனாய் எரியேந்தித்
தடுத்தாளும் திருக்கூத்தன்
தனித்தேரில் வருகுவனே 69

1268 மற்றேதான் தொடர்ந்ததனை
மணிமயிலில் இவர்ந்தேறி
அற்றோர்க்கும் அலந்தோர்க்கும்
அவர்விழைந்த உதவிடுவோன்
பற்றோடு குறமின்னும்
பரவுசுரர் வாரணமும்
உற்றேதான் தேரிலுற
உயர்வீதி வருகுவனே 70

1269 வேதமெனும் ஊர்தியதில்
விரும்பியமர்ந் துறைதந்தே
தீதகல எனைத்துலகுங்
காத்தருளும் சித்தனொடு
காதலுடன் சிவபரனார்
கடுக்கைபுனை சண்டியுமாய்ப்
போதரவே பிறிதொருதேர்
புகுதருமே வீதியுளே 71

( வேறு அறுசீர் விருத்தம் )

1270 மிக்கெழு முனிவி னோடு
மேவலர் புரங்கள் செற்ற
அக்கணி வாகை யண்ணல்
அற்புதக் கூத்த னோடே
தொக்கசீர்ப் பரிவா
ரங்கள் துன்விடு தேர னைத்தும்
புக்கிடும் கோயின் முன்னே
புகலரும் காட்சித் தம்மா 72

1271 தேரவை மீண்ட பின்னர்
திருந்திடு சிவகா மித்தாய்
ஏருறு பக்கல் மேவ
இருந்தருள் இறைவ னார்க்கும்
நேர்தரு சீற்றம் நீங்க
நிலவருட் குரவர் தாமும்
பேர்தரு பச்சை சாத்தும்
பெட்புறு கிரிய்ய செய்வார் 73

1272 அணிவிழாக் காண வந்த
அருக்கனும் அகல மாட்டான்
பணிவுடன் விசுவே சப்பேர்
பண்ணவன் றன்னை வாழ்த்தி
மணிநெடும் தனியாழித்தேர்
வைகியே குடபாற் புக்கான்
தணிவிலா உவகை விஞ்சத்
தேரடி விழவும் முற்றும் 74

1273 மன்னிய மதியே வெய்யோன்
வானமீன் தருகூத் தற்குத்
துன்னுமுத் தரமீன் வானிற்
றோன்றிடும் அமையந் தன்னில்
உன்னுசீர் அபிடே கந்தான்
உவப்பொடு மியற்று வாரே
அன்னதன் நீர்மை தானும்
அறைதரற் கரிதே யம்மா 75

( வேறு அறுசீர் விருத்தம் )

1274 சந்த னாதி தைலமுடன்
தயிர்பால் நெய்யே கரும்பொடுதேன்
நந்து சர்க்கரை முக்கனியே
நலனார் தேசிப் பழமொடு
கந்தம் கலந்த கஸ்தூரி
கருது பச்சை கருப்பூரம்
வந்த இளநீர் அன்னமுடன்
மகிழ்வான் ஐந்தும் ஆட்டுவரே 76

1275 அருளார் முழுக்கு மலமகற்றும்
அமைதி என்னா முழுகுவரே
பொருளார் நடனும் அதன்பின்னே
போற்றும் மறைகள் கோசமிட
வருசீர் அன்னை உடனாக
வந்தே காட்சி தந்திடுவான்
ஒருகால் ஏத்தின் கோடிபலன்
உவந்தே அருள்வன் தொழுதிடுமே 77

1276 அண்ணல் கூத்தன் மலர்மழையில்
ஆடும் நடமும் புகலரிதால்
பண்ணின் நீடும் பதிகங்கள்
பரவுங் கடல்போல் ஓங்கிடுமே
கண்ணும் மத்தள தாளங்கள்
கடிதா நின்று முழங்கிடுமே
எண்ணம் இன்றித் தொண்டர்தாம்
இன்ப நடமும் ஆடுவரே 78

1277 அம்பல வாணா வாவாவா
ஆனந் தக்கூத் தாவாவா
அம்பிகை பாகா வாவாவா
அருளா ரமிர்தம் தாதாதா
நம்பிடு மடியார் மிடிதீர
நடரா சாநீ வாவாவா
வெம்பவ நோய்நீ நீத்தருள்செய்
விகிர்தா வாவென் றேத்திடுவார் 79

1278 இன்ன வண்ணம் அடியவர்தாம்
இசைத்து நிற்பத் திருக்கூத்தன்
பன்ன கக்கால் புலிக்காலர்
பார்க்க வன்று காட்டுநடம்
பின்ன மில்லா வகையருளி
பேதை மாதர் சிவகாமி
அன்னை யுடனாய் மணியணையில்
அமர்ந்தே இன்பம் நல்குவனே 80

( வேறு அறுசீர் விருத்தம் )

1279 போற்றிடு பதினொ ராம்நாள்
புகழ்பயில் தளியின் உள்ளே
சாற்றிடு மறைத்த லென்னா
தந்துரை சூர்ணோற் சவத்தை
நோற்றருள் குரவர் தாமும்
நூன்முறை பிறழா வண்ணம்
ஏற்றபொற் சுண்ணம் பாடி
இடித்துமே கொள்வ ராலோ 81

1280 அருளலென் றறைய நின்ற
அரியதீர்த் தோற்ச வத்தில்
மருவிடு முற்ப கற்கண் வருவிசா
லாட்சி யோடும்
கருதுசீர் விசுவே சர்தாம்
காணுமுற் சவர்கள் கூட
திருவுலா வந்தீ சானத்
திசைமிசை சேரு வாரே 82

( வேறு கலிநிலைத்துறை )

1281 பாடும் அடியவர் பண்ணிசை
எங்கும் பயில்தருமே
நீடும் குடைகொடி சாமரம்
ஆதி நிமிர்தருமே
நாடும் இசைபயில் நல்லியம்
ஓங்கி ஒலித்திடுமே
கூடும் கருப்புர மாமணம்
யாண்டுங் சுலாவருமே 83

1282 ஏந்திக் கரகம தாங்குவர்
சென்னி இனிதேதோன்
தாந்தித் திமியென நற்கட
மாடுவர் தகையோடே
தீந்தித் திமியென கால்வடி
கொள்ளுவர் ஒருசில்லோர்
போந்தே கிருத்திம மாமென
நிற்பர் புடையெங்கும் 84

1283 அண்டி அதுவிது நல்குதிர்
என்பர் அலைசிறுவர்
மண்டும் வளையொ டுமாலைகள்
கொள்வர் மகளிருளார்
வண்டும் ஞிமிறும் ஊதிடும்
வந்தே குழல்மலரில்
பண்டம் உளசில கொள்ளுவர்
மேலும் பைந்தொடியார் 85

( வேறு அறுசீர் விருத்தம் )

1284 விழவுநாள் வைகல் தோறும்
விரவிடும் இரவுப் போழ்தில்
பழகுநல் விழுமியங்கள்
பயின்றுமே மாந்தர் வாழத்
தொழுதகு மறிஞர் தம்மைக்
கூட்டியே அரங்கமைத்து
வழுவிலாச் சொல் விருந்து
மரபுடன் நல்கு விப்பார் 86

1285 இளைஞரை அழைத்தே
ஊக்கி இயைந்திடு மேது கூட்டித்
தளர்விலா வகைவா தஞ்செய்
தகவினைப் பயிற்று விப்பான்
உளமகிழ் வுடனாய்ப்பட்டி
மண்டபம் ஒழுங்கு செய்தே
களங்கமில் உள்ளத் தோடுங்
கருமமு மாற்று வாரே 87

1286 மாண்டகு மிசைக்கச் சேரி
வைப்பித்தே விருந்தளிப்பார்
வேண்டுநல் இசைக் கதைதான்
விதவித மியற்று விப்பார்
ஈண்டுசீர்ச் சுவையொன் பாலும்
இயைந்துமே விஞ்ச விஞ்சக்
காண்டகு நாடகங்கள் காட்டுவித்
தின்பு கூர்வார் 88

(வேறு கலித்துறை)

1287 செப்பு தீர்த்தமும் நிறைந்திட திருவிழா வதற்கு
தப்பி லாவகை உயர்த்திய கொடியதை யிறக்கத்
திப்பி யம்நிறை கிரியையும் குருவவர் முடித்து
ஒப்பி லாவகை உறுதரு ஊசலும் நிறைப்பார் 89

1288 ஏறு சீர்கொடி இறக்கிய குரவரும் இனிதே
ஆறு சேர்முடி அரன்றனை மணலினி லமைத்தே
கூறு பூசனை நிகழ்திய சண்டியார் தமக்கு
பேறு சேர்தரு விழவுமே இயற்றுவர் பெரிதே 90

(வேறு அறுசீர் விருத்தம்)

1289 தீர்த்தமும் நிறைந்த காலைச்
சேத்திர மதனைத் தானே
நேர்த்திசெய் திடுவான் வேண்டி
நிகழ்த்துவர் பிராயச் சித்தம்
போர்த்தனி அபிடே கந்தான்
முற்றுவர் பின்பு தாலும்
சீர்த்திருக் கல்யாணந்தான்
செய்வரால் முறைமையோடே 91

(வேறு கலி விருத்தம்)

1290 வீக்கு சீரமிகு வட்டு நகருளார்
தூக்கு மோக்கை துரந்திட மேவியே
காக்கு மம்பிகை கண்ணுதற் கேய்மணம்
ஆக்கு மாறினி அன்புடன் ஓதுவாம் 92

(வேறு அறுசீர் விருத்தம்)

1291 கொள்ளோலை வளாகமெலாம் மலர்வனமாய்க்
கோலமுறக் குயிற்றி வைப்பார்
எள்ளாத வகைதருக்கள் எழில்குலவ
மின்குமிழ்கள் ஏற்றி வைப்பார்
உள்ளாக நீர்த்தாரை ஒழுகிடவே
திசைகடொறும் நாட்டி வைப்பார்
துள்ளாத மனமதுவும் துள்ளியெழ
ஓவியங்கள் தூக்கி வைப்பார் 93

1292 எத்திசையும் பல்லியங்கள் நின்றோங்கி
இசைத்தாரை பொழிந்து நிற்கும்
சித்தமெலாம் சிவமாகித் திகழ்குரவர்
திருமணத்திற் காய செய்வார்
நத்துமணப் பந்தரிலே நாகரிக
உடையணிந்து நங்கை மாரும்
முத்துவட மாலைபுனை காளையரும்
முறைமுறையாய் அமர்த்தி ருப்பார் 94

1293 அத்தனுறை திருக்கோயில் மகோற்சவத்தை
அரியமுறை பிறழா வண்ணம்
பத்தியுடன் இயற்றிவைத்த தேசிகரும்
பழமறைநூல் புகன்ற வாறே
கத்துகடல் சூழுலகில் காலமெலாம்
கரணவிதி கலித்தே ஓங்க
வித்தகஞ்சேர் பிரமனென விழவியற்றும்
முதல்வனுருக் கொண்டு நிற்பார் 95

1294 தேசிகனார் கோலமெலாம் சிவபரர்க்குச்
செய்தியற்றி சிறப்பு விஞ்ச
ஆசகலும் நீலமணி ஆய்ந்தெடுத்து
நல்வினைஞர் ஆய பல்லோர்
பாசமுடன் இனிதமைத்த பாங்குறுசீரத்
தவிசதனில் அமர வைப்பார்
நேசமொடு தலைப்பாகை உத்தரியம்
நிறையூண்கள் பூட்டி வைப்பார் 96

1295 கன்னியெனக் காலமெலாம் உயிர்க்குலத்தைக்
காதலுடன் காத்து வக்கும்
அன்னையெங்கள் விசாலையெனும் ஆத்தாளை
அழகொளிரக் கோலம் செய்வார்
பன்னுபல மணியணிகள் பொன்னணிகள்
பிரபைதர பூணுவிப்பார்
மன்னுமண மகளாக திகடரவே
மணிப்பீடத் திருக்கச் செய்வார் 97

( வேறு அறுசீர் விருத்தம் )

1296 பல்லுயிர் தோறு மாகிப்
பரிவுடன் புரந்து காக்கும்
வல்லசீர்க் கணேசர் பாதம்
வழுத்தியே திருமணந்தான்
அல்லலொன் றின்றி நன்கே
அமைந்திட அருளாய் யென்று
மல்குபேர் உவகை யோடும்
வேண்டுவர் குரவர் தாமே 98

1297 கடிமண வேதி கைக்கண்
கவினொடும் அமர்ந்தி ருந்த
துடியிடை விசாலைத் தாய்க்கும்
தூயராம் விசுவே சர்க்கும
மடிவிலா உளத்த ராகி
மன்னுநற் குரவர் தாமும்
நெடிதுறு காவல் நாணை
நிறைவுடன் பிணித்தா ரன்றே 99

1298 தூயதாம் பனிநீர் கொண்டு
துலக்கினார் இருவர் பாதம்
ஏஎபன் மலருஞ் சாத்தி
இலங்கிடு தூபம் காட்டி
பாயசீர்த் தீபங் காட்டி
பரவியே பூசை செய்து
ஆயநற் பந்தர் முற்றும்
அரும்புகை கமழ வைத்தார் 100

1299 சந்திர கும்ப பூசை
தகைபெறத் தொடங்கி மேலும்
நந்திடு பாத்தி ரத்துள்
நன்முளை தானு மிட்டு
வந்தவை கர்த்த னாதி
வானமர் பரிதி யார்க்கு
முந்துசீர் வழிபா டெல்லாம்
முற்றுவித் ததன் மேலாக 101

1300 நித்திய சாட்சி யாக
நின்றிடும் அங்கி தன்னை
உத்தம குண்டத் தின்கண்
ஓங்கிநன் கொளிரப் பண்ணி
சித்தியே மிகுதல் வேண்டி
செய்யுகா ரியங்கள் முற்றி
மிக்கபே ரின்பு மேவிக்
குரவரும் தொடர்ந்தார் அம்மா 102

1301 மங்கலப் பொருள்க ளோடும்
மாலையே கூறை மற்றும்
குங்கும மஞ்சள் கூட
கொண்டுநல் ஆசி பெற்று
அங்கயற் கண்ணி பாங்கர்
அருத்தியின் நல்கிப் பின்னும்
புங்கவர் விசுவே சர்க்குப்
பொன்வினல் ஆடை தந்தார் 103

1302 காவியங் கண்ணி னாரை
கருதுபல் லுயிர்கட் கெல்லாம்
ஆவியுள் ஆவி யாகி
அமர்ந்திடும் அன்னை யாரை
ஓவியத் தெழுத வொண்ணா
எழில்பயில் விசாலை யாரை
தெவியாய்த் தானஞ் செய்தார்
தேவதே வர்க்குத் தானே 104

1303 மன்னிய சபையா ரோடு
மதிகதிர் அங்கி தானுங்
கன்னிகா தானத் துக்கே
கருதிடு சாட்சி யானார்
அன்னையைப் பிரியேன்
என்றும் பிரிந்திடின் ஆற்றேன் என்றும்
முன்னுநல் அன்பி னாலே
மொழிந்தனன் முற்றும் ஆனோன் 105

1304 நாடிடு சுபமுகூர்த்தம்
நண்ணிட மாங்கல் யத்தை
நீடிய வாழி யென்றே
நெஞ்சகம் குழைந்து வாழ்த்தி
ஈடிலா வரன்கைத் தந்தே
இறைவியார் கந்த ரத்தே
கூடுசீர் உலகம் உய்யக்
குரவரும் அணிவித் தாரே 106

1305 பாலொடு தயிர்நெய் தேனை
பழத்துடன் பிசைந்து கூட்டி
சேலன விழிவி சாலை
திருக்கரந் தன்னிற் றந்தே
நீலமார் கண்டர்க் கூட்டி
நேயமாய் அன்னை துய்க்கும்
கோலமார் காட்சி தன்னைத்
தேசிகர் கூட்டு வித்தார் 107

1306 கோதரி சனமே என்னாக்
கூறிடு கிரியை தன்னை
ஏதமில் கமலை யாரை
இன்போடு காண்டல் என்பார்
மேதகு மணம்பு ணர்ந்தோர்
மிக்கநல் இன்பம் துய்க்க
முதறி வாள் தாமும்
முன்னிதை இயற்றி வைத்தார் 108

1307 அங்கியை வலமாய் வந்தே
ஏழடி அவர்ந டத்தல்
இங்கினிக் கேள்வ ணாரின்
ஏழுமும் மரபு தன்னை
பொங்குபேர் ஆசை கூட்டப்
புதுமண மாது காண
தங்குபா வனையாம் என்றே
சாற்றினர் சான்றோ ரம்மா 109

1308 சுந்தர விசுவே சர்தாம்
துய்யதங் கரமே பற்றி
இந்திரை அயலிற் காப்ப
வேந்திழை விசாலைத் தாயின்
முந்துசீர் வலது காலை
முன்புறும் அம்மி சேர்ப்பர்
சிந்தைதன் உரமே பேணும்
திறமிது எனப மேலோர் 110

1309 மருந்தன மொழியே பேணும்
மாதராம் அகலி கையார்
பொருந்துதன் பதிக்கி ழைத்த
புன்மையை நினைவு செய்தே
அருங்கல மாகக் கற்பை
அவனியோர் பேணற் காக
வருந்தனிக் காட்சி யென்றும்
வகுப்பதும் உண்டு தானே 111

1310 மன்னுமா மறையு மோதி
வாழ்த்தியே புரோகி தர்தாம்
துன்னுசீர் அறுகி னோடு
தூக்குநல் லரிசி சேர்த்தி
முன்னையே இயற்றி வைத்த
அட்சதை முறையிற் கொண்டு
பன்னுபா தாதி கேசப்
பரிசினில் வாழ்த்து வாரே 112

1311 எங்கணும் நிறைந்தி லங்கும்
அம்மையோ டப்பன் ஆகத்
தங்குசீர் விசாலைத் தாய்க்கும்
தற்பர விசுவெ சர்க்கும்
மங்கலா ராத்தி காட்டி
மகிழ்வுடன் திலகம் சூட்டி
பொங்குமா னந்த வாரி
பொருந்துவர் அடியர் தாமே 113

1312 திப்பியத் திரும ணந்தான்
சிறந்துமே நிறைந்த காலை
அப்பனும் அம்மை தானும்
அணிமழ விடைமீ தேறி
தப்பிலா அடியர்க் கெல்லாம்
தலையளி செய்து வாழ்த்தி
இப்பரி சின்பம் என்றும்
எய்துகென் றுரைத்து மீண்டார் 114

(வேறு அறுசீர் விருத்தம்)

1313 அருள்பெருக்கும் பெரும்புலவோர் அழகொளிரும்
அலங்கார மாடம் என்ன
பொருள்பெருக்கும் புராணங்கள் சிவபரர்க்குப்
பற்பலவே புனைந்து தந்தார்
இருள்பெருக்குஞ் சிற்றறிவின் எளியேனும்
சிறுகுடிலாய் இதனைச் செய்தேன்
தெருள்பெருக்கும் பேரறிஞர் குறைகாணார்
காய்தலின்றிப் பொறுப்ப ரன்றே 115

## (வேறு அறுசீர் விருத்தம்)

1314. மின்பயில் விசாலை பங்கர்
விகலேச அழக னாரும்
பொன்பயில் கலனோ டென்பும்
புனைவரால் விரைந்து தானே
புன்சொலின் புராண மீதை புல்லிதென்
றிகழார் கொள்ளார்
இன்புடன் புனைந்தேன் ஏற்றும்
இரங்கியே அருள்வா னன்கே 116.

1315. அன்னையாய் அத்த னாகி
அருள்தரு குரவ னாகிப்
பின்னுமென் சிந்தை புக்கு
பேகமெய் உணர்வு தந்தாய்
மன்னுநற் கலைகள் ஓங்கும்
வட்டூரில் விசுவ நாதா
கன்னலே அமிர்த தேனே
கடவுளே போற்றி போற்றி 117.

1316. கடவுளே போற்றி எங்கள்
கற்பகக் கொழுந்தே போற்றி
தடவிழி விசாலாட் சித்தாய்
தையலை இடத்து வைத்தாய்
குடமுழா ஓசை நீங்காக்
கொள்ளோலை உவந்தமர்ந்தாய்
உடலுறு பிணிகள் தீர்ப்பாய்
உயர்திரு வடிகள் போற்றி 118.

1317. அடியிணை பரவும் அன்பர்க்
கருள்புரி அரசே போற்றி
வடிநெடு வேலின் கண்ணார்
விசாலையார் பாக போற்றி
கடிபொழில் வட்டூர் மேய
கன்னுதற் பரனே போற்றி
மிடிமுதல் இன்னல் தீர்த்து
வாழ்வருள் கருணை போற்றி 119.

1318. கருணைமா முகிலே போற்றி
கருதுபேறருமே போற்றி
உருகிநின் றுனைரும் அன்பர்
உளத்தவி சுறைவாய் போற்றி
பெருகிடு பவநோய் மாற்றும்
பிஞ்ஞகா பிரானே போற்றி
வருமெழில் விசுவேச்சரம் வாழ்
வள்ளலே சிவமே போற்றி 120

1319. வள்ளலே அமலா போற்றி
வந்திடும் அல்லலெல்லாம்
பொள்ளென விடியப் போந்த
பொற்கதிர்ப் பரிதி போற்றி
விள்ளுசீர் விசாலை அன்னை
மேவும்செம் பொருளே போற்றி
வள்ளியார் வதியும் வட்டூர்
விசுவேச அடிகாள் போற்றி 121.

1320. வளங்கொழு விசுவேச் சரத்துறை
வள்ளலின் திருத்தாள் வாழி
விளங்கிடும் ஏழைத் தேவர்
விரிமலர்ப் பதங்கள் வாழி
களங்கமில் அடியார் வாழி
கவினுறு புராணம் வாழி
உளங்குழைந் தோது வார்தாம்
ஊழிவாழ்ந் துறுக பொன்னே. 122.

சுபம்

திருச்சிற்றம்பலம்

விழாவயர் சுருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் 1320

வட்டுக்கோட்டையூர்ப் புலவர்மணி, பண்டிதர்
திரு. க.மயில்வாகனனார்
இயற்றிய
வீரபத்திர சிவபுராணம் என வழங்கும்
அருள்மிகு விசுவேசர் புராணம்
முற்றிற்று

# பாட்டு முதற் குறிப்பு அகராதி

(எண் பாட்டு எண்)


அ

| | |
|---|---|
| அக்குளை | 1080 |
| அக்குமாலை | 565 |
| அகரம | 942 |
| அகலுந்தோளை | 377 |
| அங்கியை | 1307 |
| அங்கியொடும் | 669 |
| அங்கிருந் | 960 |
| அங்குரார்ப் | 1239 |
| அஞ்சொலா | 65 |
| அஞ்சொலின் | 1151 |
| அஞ்சொலோதி | 1143 |
| அடல்வலி | 745 |
| அடலேறு | 813 |
| அடித்தொண்டர் | 1195 |
| அடியருளார் | 902 |
| அடியிணை | 1317 |
| அடுத்தூரும் | 434 |
| அடுத்தேதான் | 1267 |
| அண்டமெலாம் | 438 |
| அண்டரிய | 519 |
| அண்டர்கோன் | 42 |
| அண்டியது | 1283 |
| அண்ணல் | 1108 |
| அண்ணல் | 1276 |
| அண்ணலவர் | 892 |
| அண்ணலார் | 473 |
| அண்ணலர்ர் | 832 |
| அண்ணலே | 966 |
| அணிமுகங் | 25 |
| அணியான | 1266 |
| அணிவிழா | 1272 |
| அத்தநீ | 110 |
| அத்தனவன் | 664 |
| அத்தனார் | 476 |
| அத்தனுறை | 1293 |
| அத்தனே | 547 |
| அதிரவரு | 1009 |
| அதுகண்டே | 803 |
| அந்தண் | 569 |
| அந்தநன் | 1033 |
| அந்தணனும் | 153 |
| அந்தணாள | 357 |
| அந்தமில் | 719 |
| அந்தநற் | 1035 |
| அந்தப் | 55 |
| அப்பணி | 756 |
| அப்பணியும் | 794 |
| அப்பாமுதலி | 793 |
| அப்பாவும் | 593 |
| அம்பலவன் | 1060 |
| அம்பலவாண | 395 |
| அம்பலவாணா | 1277 |
| அம்பிகை | 823 |
| அம்பிகையும் | 495 |
| அம்பிகையும் | 513 |
| அம்பலத்தாடு | 1163 |
| அயலுற்ற | 512 |
| அயனரி | 727 |
| அயனும் | 529 |
| அயாமுதல | 774 |
| அரக்கர்நாயகன் | 736 |
| அரகர | 898 |
| அரசுசெய் | 392 |
| அரவதனை | 1052 |
| அரவம் | 812 |
| அரவணியும் | 451 |
| அரவினை | 245 |
| அரவுடன் | 474 |
| அரன்றனை | 108 |
| அரனடி | 43 |
| அரனடி | 1086 |
| அரனடிமறவா | 1116 |
| அரனுறை | 1200 |
| அரிதாஞ் | 618 |
| அரிமலர் | 242 |
| அருகுறை | 291 |
| அருட்பெருஞ் | 887 |
| அருடான் | 698 |
| அருள்குலவும் | 1263 |
| அருண்மலி | 1153 |

அருத்தமிகு 1122
அருத்தியோ 1034
அருந்தமிழ் 385
அருள்பெருக்கும் 1313
அருள்பொழி 1240
அருள்விரி 916
அருளார்முழு 1275
அருளலென் 1280
அருளுஞ் 693
அருளுரு 715
அருளென்னும் 1043
அல்லணியும் 1005
அல்லலார் 648
அல்லார்கண் 558
அல்லை 478
அலகிலா 1217
அலரவன் 204
அலைகொழி 147
அற்றைநாள் 389
அறத்தினின் 764
அறமது 910
அறிகரற் 22
அறிவுடைய 672
அறுவகை 760
அறைகழல் 1192
அறையும் 527
அறையுமா 135
அன்பருளீர் 912
அன்பினின் 932
அன்புவிஞ்சு 1116
அன்பே 788
அன்றாலின் 879
அன்றுதண் 190
அன்றுநீ 111
அன்றேயெங் 875
அன்றொருநாள் 591
அன்றொருவைகல் 865
அன்றோர்நாளில் 792
அன்னசீர் 127
அன்னதுகேட் 766
அன்னதுகேட்ட 1026
அன்னதுகேட் 947
அன்னதன்பின் 1247
அன்னதோர் 515
அன்னநற் 1145
அன்னன 82
அன்னான் 202
அன்னைதன் 824
அன்னையவள் 151
அன்னையாம் 987
அன்னையாம் 1078
அன்னையாய் 1315
அன்னையாய் 573
அன்னைவேண்ட 545
அன்னமாகி 713
அன்னவர் 386
அன்னவன் 925
அன்னவை 743
அன்னான் 202
அன்னோன் 811
அனைத்துலகும் 494
அனைத்துலகும் 486

ஆ

ஆக்கி 1058
ஆக்கையுட் 635
ஆகமமும் 115
ஆகமமும் 588
ஆகாயம் 638
ஆங்கண் 537
ஆங்கவன் 1074
ஆங்கனம் 857
ஆங்கிலர் 383
ஆங்கிவர் 1172
ஆங்கிறைவி 499
ஆசான்றன் 626
ஆடலரயன் 1235
ஆடிடும் 1146
ஆடினர் 958
ஆண்டருள் 152
ஆண்டுமே 1036
ஆண்டுதோ 1224
ஆணவஞ் 675
ஆணவத்தின் 1051
ஆத்தனார் 826
ஆத்தியணி 4
ஆத்மதத் 685
ஆதிகாரணி 728
ஆதிகாவியங் 431
ஆதியந்தம் 471
ஆதியாய் 934
ஆதியில் 749
ஆதியிலாதி 771
ஆதியெங் 972
ஆதியென 863
ஆதியோடந்தம் 634
ஆமை 281
ஆயசீர்த்தி 185
ஆயதாந் 676
ஆயநல் 67
ஆயிடை 316

ஆயிரமா 457
ஆயிரமுடி 571
ஆயிரமௌலி 21
ஆயிழை 574
ஆயிழை 516
ஆரணம் 1117
ஆரலர் 963
ஆலம்உண்ட 555
ஆலயந்தனை 828
ஆவரனந்தான் 620
ஆவரு 69
ஆவலோடு 104
ஆவின் 130
ஆவினந்தனை 230
ஆழியாம் 308
ஆற்றன்மலி 561
ஆற்றியநல் 757
ஆற்றுமன்பில் 741
ஆறங்கம் 407
ஆறணிந்து 1049
ஆறணி 97
ஆறுசீர் 24
ஆறுதரும் 10
ஆறுமுகம் 209
ஆறுமுகம் 1008
ஆறென 1222
ஆறெனும் 365
ஆனந்தநட 1160
ஆனந்தநிரு 1124

இ

இச்செயலால் 504
இசைபயில் 1104
இத்திறம் 548
இந்தநல் 710
இந்தவிதம் 800
இந்திரன் 969
இந்திரன் 85
இந்திரன் 163
இந்திராதியர் 847
இம்பரித் 1094
இயற்கையின் 1223
இரங்கிடே 871
இரங்கி 303
இரட்சகர் 381
இரதி 375
இருக்குமே 597
இருட்குலம் 582
இரும்பிணை 369
இருளிலிருள் 673
இல்லறஞானி 791
இல்லறம் 575
இல்லினுக்கு 297
இலகும் 1226
இலிங்கம் 816
இல்லிடை 889
இவ்விதம் 549
இளமடற் 287
இளைஞரை 1285
இற்றவப் 1028
இற்றை 184
இறும்பிடை 238
இறையவன் 1081
இன்சுவை 27
இன்பா 215
இன்பாய் 175
இன்னபான்மை 352
இன்னவகை 141
இன்னவண்ணம் 1278
இன்ன 101
இன்னவிதம் 150
இன்னவெலாம் 510
இன்னுயிர் 714
இன்னே 873
இன்றமிழின் 341
இன்று 397
இனியநல் 1241

ஈ

ஈங்கிது 661
ஈங்கிவை 372
ஈங்கிவையும் 752
ஈசன் 416
ஈசன் 977
ஈட்டிய 683
ஈடிலா 606
ஈராறு 1016
ஈழநாட்டு 161

உ

உக்கிர 1128
உடலகத்தில் 1045
உடலதனை 604
உடலமும் 642
உடலொடு 684
497. நந்துரு — சங்குவடிவம், தனி முதல் — ஒப்பற்ற தலைவி, ஏமம் — காவல்.

499. பரன் — சிவபெருமான்.

500. இருந்தனமும் — பெரிய முலை களும். முகிழ்த்தல்-விரிதல்.

501. முக்கணி — மூன்று கண்கள் உடையவள், (கணிஇடை குறை,)

502. பன்ன — சொல்ல. முன்னி — நினைந்து,

503. திசைமுகன் — பிரமதேவர்,

504. நம்பன் — சிவபெருமான்.

505. கஞ்சமலர் — தாமரைமலர்.

506. வெய்துயிர்த்தான் — பெருமூச்சு விட்டான்.

507. தண்டம் — தண்டனை, ஆண்டி — தவசி.

508. நாயகம் — தலைமைப்பதவி. வடவை — வடவைத்தீ.

509. சூர் — சூரபத்மன், நைக — வருந்துக. உரு — அச்சம்.

510. தசீசி — ஒரு முனிவர்.

511. நுங்குதல் — விழுங்குதல்.

512. முயறல் — முயலுதல்.

513. வம்பு மலர் — புதுமலர். கூளி — பேய், அவிப்பாகம் — தேவாதி யர்க்கு யாகத்தே வழுங்கப் படும் உணவுப் பகுதி.

514. சீற்றம் — கோபம்.

515. அற்றம் — சமயம். தழல் — நெருப்பு. மாய்க்க — அழிக்க. காயெரி — கோபத்தீ.

517. மூலம் — யாவும் தோன்றும் இடம்.

518. பாணி — கை. தூணி — அம்ப றாத்தூணி. கழுமுள் — ஆயுத விசேடம், தாணு — சிவபெரு மான்.

519. சூறை — சண்டமாருதம். விண்டிடுதல் — சொல்லுதல்.

520. விள்ள — சொல்ல.

521. வாண்முதல் — வாள் + முதல். பத்திரை — பத்திரகாளி.

523. துன்றுபணி — செயவேண்டும் கருமம். மறை — வேதம். நாடுகிலன் — ஆராயாதான். மாமகம் — பெருவேள்வி.

524. போக்கீர் — அழியுங்கள்.

525. மாய்தர — அழிய.

526. மிடைவர் — நெருங்குவர். வயவர் — வீரர், மடை — வாய்க்கால்.

527. மரனும் — மரமும். நிகழ்வுழி — நிகழும் இடம்.

528. கலவும் — பரவும்

529. வயம் — வலிமை. இறும் — அழியும்.

530. கதம் — கோபம்.

531. தூவிடை — பரிசுத்தமான இடம். ஓவறும் — ஒழிவற்ற. ஓசை — அசரீரி வாக்கு.

532. வானிழல் — அசரீரி.

533. ஈமம் — சுடுகாடு. பலி — அவிப் பாகம்

534. பரிசு — தன்மை.

535. கால் — காற்று

536. வெருவுற்றான் — அஞ்சினான்.

537. ஓம்புதி — பாதுகாத்தருள்.

538. அனிலன் — வாயு.

539. மேவலர் — சரணடையாதவர்.

540. பணிலத்தோன் — சங்கேந்திய திருமால். வேவ — எரிய.

541. வையம் — தேர்.

542. ஒரும் — உணரும்.

543. சாலும் — போதும்.

544. பெற்றம் — எருது.

545. அன்னை — தாய் (உமையம்மை) வீந்த — இறந்த. மைத்தலை — ஆட்டுத்தலை.

546 உலகட — உலகு + அட. அட — அழிக்க.

547. அலந்தேம் — துன்பப்பட்டோம்

548. நைகிலிர் — வருந்தீர்

549. பதம் — தத்தமக்குரிய இடங்கள். புவ்வம் — கடல்.

550. ஆடல் — திருவிளையாடல்.

551. கோரமூர்த்தி — அச்சந்தரும் வடிவினர்

553. சரபம் — சரபப்பறவை.

555. உய்ந்தனர் — விமோசனம் அடைந்தார்கள்

557. கனன்று — கோபித்து

558. அல்லார் — இருண்ட. மாருதி — அனுமன்.

559. இசையாளன் — புகழ்பூத்தவன். இயம் — வாத்தியம்.

560. பிரதிட்டை — தாபனம்.

561. ஆதவன் — சூரியன். கதலி வனம் — இடவிசேடம்.

562. மண்டலம் — நாற்பது நாள். நிவந்தம் — முதலீடு.

563. ஆத்தன் — கடவுள்.

564. மேடமதி — சித்திரை மாதம். இடபம் — வைகாசி மாதம்.

565. அக்குமாலை — உருத்தி ராக்கமாலை.

566. படிவம் — திருவுருவம்.

570. துரியம் — பரிசுத்தம்.

571. கட்கம் — வாள்.

574. நாண்மலர் — அன்றலர்ந்தபூ

579. உருத்தெழு — வருத்தி எழு கின்ற. சீலர் — ஒழுக்கமுடை யார்.

581. சேல் — கயல்மீன். சார்ங்கம் — சாரங்கம் (திருமால்கரத்துவில்)

582. இருட்குலம் — அஞ்ஞான இருள். தேசிகன் — ஞானகுரு. மூரி — பழைய. பதுமம் — தாமரை. சேவடி — சிவந்த திருத்தாள்.

585. மங்கலவாரம் — செவ்வாய். சங்கரி — சுபத்தைச் செய்பவள்.

588. சீகரம் — பாற்கடல். போகம் — இட்டசித்தி.

589. வல்வினை — தீவினை. குரவர் — அருட்குரு.

590. நிதம் — நித்தமும். அப்பா முதலி-பரராசசேகரன், மந்திரச் சுற்றத்துப் போந்த தெய்வே ந்திர முதலி வழிவந்தோன்.

591. அருத்தி — ஆசை. உணா — உணவு. ஏந்தல் — சிறந்தோன்.

592. பரித்தல் — தாங்குதல். பால் — வெண்மை. பின்னயது-பக்கம்.

593. தீக்கை — தீட்சை தீ — கொடுத்தல், க்ஷை ~ கெடுத்தல் பாசத்தைக் கெடுத்து மோட் டத்தைக் கொடுத்தல்

594. மலக்குறும்பு — மும்மலவாதை.

595. அரந்தை — துன்பம். நிரல்பட — ஒழுங்காக வியாசர் வகுப்ப தன் முன், வேதங்கள் தைத் திரியம், தலவகாரம், பௌ டிகம், சாமவேதம் எனப்பரந் துபட்டுக் கிடந்தன.

596. மந்ரம் — மந்திரம்: கடவுளை நினைதற்குக் கருவியாக உள்ள வாசகம். அது உச்ச ரிப்பவரைக்காப்பது.

பிராமணம்: வைதீகக் கிரி யைகளை விரித்துக் கூறும் பகுதி, உபநிடதம்: வேத சிரசு, வேதத்தின் உட்பொரு ளைக் கூறுவது; குருவின் பாதத்துக்கு அருகில் அமர் ந்து கேட்கப்பட்ட நூல், உப+நி+ஷத், உப=கிட்ட, நி=கீழ், ஷத்= உள்ளது.

597. விருத்தம் – விரோதம். வைதீகர் – வேத வழிநிற்போர்.

598. திரயம் – மூன்று. உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன.

599. வேதம் = கற்பக விருட்சம். கனி = வேதாந்தம். வேதாந்தம் – வேத + அந்தம். அந்தம் – முடிவு

600. அத்துவைதம் – ந+துவைதம் – இரண்டற்றது. விசிட்டாத்வைதம்: பிரமம் வேறு, ஆன்மா வேறு, பிரமத்திற்கு சரீரமாய் இருந்து, பிரமத்தின் சந்நிதான விசேடத்தால், கைகூடப் பெற்று பிரபஞ்சத்தை துறந்து, பிரம சொருபம் பெற்று, இன்புறு தலை விரிக்கும் கோட்பாடு.

துவைதம்: சிவனும், சீவனும் வேறெனக் கொள்ளும் கோட்பாடு. சிவாத்துவைதம்: ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கும் கோட்பாடு.

602. மித்தை – பொய். கயிற்றைப் பாம்பென்றும் குற்றியைக் கள்வனென்றும் கருதுதல் போலாம்.

603. தேகம் – உடல். தேகி – உடலில் உறைபவன். உடல்; சேத்திரம், தனு, திருசியம் . ஒருபொருட்சொற்கள்.

உடலில் உறைபவன் – புருடன், சேத்ரஜ்ஞன், ஆன்மா, திருக் ஒரு பொருளன.

604. இச்செய்யுளில் 24 தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. அவை 1. மூலப்பிரகிருதி 2. சமட்டி புத்தி 3. அகங்காரம் 4. சூக்குமம் இவை தன் மாத்திரை. தூலபூதம்-பிருதுவி முதய 5, ஞானப்பொறி-ஞானனேந்திரியங்கள்- கண் முதலிய 5 கன்மேந்திரியங்கள்:வாக்கு, பாணி,பாதம்,பாயுர், உபத்தம் ஆகிய 5 மனம் தன்மாத்திரை: சுவை ஒளி ஊறு, ஓசை, நாற்றம், முதலிய 5

606. அவியத்தம் – வெளிப்படாமை. வியத்தம் – வெளிப்படுதல். முக்குணம் – சாத்விக, ராசத, தாமசங்கள்.

608. ஓவற – ஒழிவற. சகங்கள் – உலகங்கள்

609. சாத்விகம் – ஸத் + த்வம் இக – ஸ்த் – நல்லது, நன்மை. த்வம் – தன்மை, இக – விகுதி. தெரிசனம் – காட்சி, சுருதி – வேதம்.

610. இராசதம் – இரஜஸ் – உடன் கூடியது – மன எழுச்சி. ரஜ்: எழும்புதல், ஊக்குதல்

611. தமோகுணம் – தாமசகுணம். (தமஸொடு கூடியது.) தமஸ் = கருநிறம், திரிபு – விபரீத உணர்வு ஒன்றை வேறொன்றாகக் காணுதல், ஐயம் – சந்தேக உணர்வு இதுவோ அதுவோ என ஐயுறல் ஒடுக்கரும் – நீக்க இயலாத. மாட்டு –

இடத்தில், உழுலுதல் — வருந்துதல்.

612. ஆவரணம்: — இது உண்மையை அறிய எழுந்த உணர்வை மறைத்து சத்துப் பொருள் என்று அறியும் படி அசத்துப் பொருள்களை மறைத்துக் காட்டும் சத்தி. பிறப்புக்கு மட்டுமே அநுகூலமானது. இரவு அனையது. விட்சேப சத்தி: மித்தை: நானாவித காட்சிகட்கு இடமாயுள்ளது. முன்னது இருளே என வளர்ந்து மூடும் எனவும் விட்சேபந்தான் நந்திடும் உண்மை தேறா நவை தரும் என்றும் கூறும்டுக. நவை — குற்றம் நந்துதல் — வளர்தல்.

613. சைதன்யம் — அறிவுடையது. சேதனமுடையது சைதன்யம். சேதனம் = சித்து. அந்தர்யாமி — ஆன்மாவுடன் கலந்திருக்கும் கடவுள். கார்ண — காரணம், காரணதேகம். சுழுத்தி, சுழுத்தி அவத்தை, ஆனந்தம் — ஆனந்தமய கோசம்.

614. அவித்தை — அஞ்ஞானம், பிராக்ஞர் — தூக்கநிலையில் அறியாமைக்குச் சாட்சியாக விளங்கும் தனித்த வடிவுடைய ஆன்மா. காரண மானந்தம் சுழத்தி என்றது, காரண தேகத்தையும் ஆனந்த கோசத்தையும் சுழுத்தி அவத்தையுமாம்.

615. ஆயின் — ஆராய்ந்தால், கேவலம் — தனி, பிராணன் — பிராண வாயு.

616. சூக்கும பூதம் — தன்மாத்திரைகள். சத்த, பரிச, ரூப, ரச, கந்தங்கள். இரணியகற்பன் — சூத்ராத்மன்; படைப்போன்.

617. சீவர்க்கு சூக்கும தேகம் 17 தத்துவங்களால் ஆயது அவை ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, மனம் 1, புத்தி 1, வாயு 5 என்பவாம்.

618. அட்டகாயம் — எட்டின் கூட்டம்.

619. அரக்கர் — இராக்கதர்

620. தாவகல் = தா + அகல், தா — குற்றம், அகல் — நீங்கிய ஆரோபம்:- தன்னை உபாதித் திரயத்துள் ஒன்றாகக் காணடல், கூடத்தன் = கூ + ட + த்தன் — ஞானாத்மா.

621. விராட்புருடன் — பருமை உலகுக்குக் காரணமாக விளங்கும் இப்பிரபஞ்ச வடிவுடைய ஆன்மா.

622. விசுவன் — நனவுநிலையில் தன் முனைப்புடன் விளங்கும் தூல உடம்பில் அமைந்திருக்கும் ஆன்மா.

623. எழுவகைத்தாது: தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர், இந்திரியங்கள் — ஞான, கன்மப் பொறிகள்.

625. சைதன்யம் — அறிவு, ஆன்மா. மூன்றிற்கும் என்றது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி முன்றுமாம். கூடத்தம் — ஆன்மாவின் நிசசொருபம்.

626. மமகாரம் — எனது, அகங்காரம் — நான், பிரகிருதி — மூலப்பகுதி, அபரஞானம் — சிற்றறிவு, பரஞானம் — பேரறிவு, ஸ்திர ஞானம் — நிலையான அறிவு, அபவாதம்: தெளிவு, தெளிவினால் வருவது, முத்திப் பேறு.

627. மன் — இறைவன், துய்த்தல் — அனுபவித்தல், சனனம் — பிறப்பு.

628. பருவுடல் — தூல உடல், மாழ்கி — வருந்தி, கரைந்து இற்றால் — நைந்து கிழிந்தால்.

629. கோல உடல் — அழகிய உடல், போகம்: அனுபவம், புசிப்பு.

630. நீயாதோ = நீ+யாதோ. நீ இங்கு மாணவன் (சிவஅப்பா) நிரதி சயம் — தனக்கு மேற்பட்டது ஒன்று இலாதது.

631. சச்சிதானந்தம் = சத்+ சித் + ஆனந்தம். உண்மை, அறிவு, இன்பம்.

632. தோமறு — குற்றமற்ற, நேமம் — நெருக்கம் இங்கே கூறப்பட்ட என்னும் பொருளது.

633. அருக்கன் — சூரியன், சிவப்பிரகாசம் — சிவஒளி

634. போதன் — பிரமதேவன், பிரபஞ்சம் — உலகு, போகி — இந்திரன், புராரி — உருத்திரன்.

635. வியாபகன் — எங்கும் நிறைந்தோன், நுவன்றிடல் — சொல்லுதல், நித்தன் — என்றும் உள்ளோன், மும்மைத்தாய தொழில் — படைத்தல், காத்தல், அழித்தல்.

636. நாசோற்பத்தி=நாச்+உற்பத்தி, அழிந்து ஆதல்.

637. பரிபூரணம் — நிறைந்த பூரணத் தன்மை. மகாகாயம் — விரிந்த வான், மேகசலம் — மேகநீர், பிரதிபிம்பம் — பிரதிவடிவம், கூடத்தன் — ஆன்மாவின், நிச சொருபன்., கடம் — குடம்

638. சோகாதி — மூவகைத்துன்பம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் ஆதிஆத்மிகம். தைவிகம்: தெய்வத்தால், பௌதிகம்: பூதங்களால், ஆத்மிகம்: உயிர்களால், தத்துவமசி — தத்+ துவம்+அசி, தத்=அது (அப்பிரமம்) துவம் — நீ (ஆன்மா) அசி = ஆகின்றாய். முத்தி — விதேகமுத்தி.

639. இன்மை — அபாவம், பகரின் — கூறின், அற்று — அத்தன்மைத்து.

640. தனு — உடல், விகங்கம் — பறவை, புசிப்ப — உண்ண, அனுபவிக்க.

641. பழுதை — கயிறு, நயப்பர் — மதிப்பர், விரும்புபவருமாம்.

642. திருசியம்: அறிவினால் அறியப்படும் பொருள், தேகி - சேத்ரஞ்ஞன் (ஆன்மா)

643. வலம் - வெற்றி, வலிப்பின் - ஆராயின், மித்தை - பொய், இலகிடும் - விளங்கும்.

644. பிறங்கு - விளங்கும், திறன் - தன்மை.

645. சீர்மை - சிறப்பு, நாடு - தேடப்படும், விருப்பு. சட்கசம்பத்து - ஆறுசெல்வங்கள். நேர்மை - வலிமை

646. விவேகம்: நித்திய, அனித்திய, நிர்ணயம் தெரிதல். நிராசை - இம்மை மறுமையில் வரும் போகங்களில் வெறுப்பு எழுதல். சமாதி - கூட்டம் அதாவது சமம் முதலாக சிரத்தை ஈறாக ஆறும் உடைமை. இச்சை= முமூட்சுத்துவம்) முத்தியை விரும்பும் இச்சை.

647. துகளிலோய் - குற்றமற்றவரே (விளி).

648. சட்கசம்பத்து: சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம், 1. சமம்: மன அடக்கம், 2.தமம்: புலஅடக்கம், 3.உபரதி: பொறி அடக்கம், 4.திதிட்சை: சகித்தல்: 5.சிரத்தை: குருவிடத்தும் வேதாந்தத்தும் பற்றுவைத்தல், 6.சமாதானம்: வேதாந்தத்தைக் கேட்டலை விளையாட்டாக உடைய சன்மார்க்கம்.

649. ஆரோபம் - தன்னை உபாதித்திரையத்துள் ஒன்றாய்க் காண்டல், அபவாதம் - தன்னை, ஞானப்பிரகாசமாக விளங்கக் காண்டல்.

650. தியானம்: மனஒருமைப் பட்ட நிலை, கூரிய சிந்தனை நிலையுமாம்.

651. அநுபூதி: பிறபொருளின் உபகாரம் வேண்டாது இயற்கையால் பொருள்களை அளந்து அறியும் அறிவு.

652. ஞானநிட்டை, சொருப ஞான நிட்டை= அறிவே வடிவாய் விளங்குதல். ஊடுபோகி இடையிற்குறுக்கிட்டு, அஞ்ஞானம் - சைதன்யத்தைக் கண்டு இதுதான் இதுதான் எனக்கொள்ளும் மனோதிடத்தை மறைத்து திணை, பால், இட பேதங்களைக் காட்டுவது. சந்தேகம்: குருவாக்கால் நம்பாமல் குழம்புவது. விபரீதம்: ஸ்திரமற்ற உலகு மெய், தேகம் நான் என்பன போல மனத்தே விரவிய மோகம், பாடு - துன்டம்.

653. தடைகளை கேட்டல், சிந்தித்தல் தெளிதல் மூன்றினாலும் வெல்லலாம்

654. பருவுடல் - தூலவுடல், வீடுதல் - பிரிதல், அழிதல், பார் - பூமி, உபாசனை - வழிபாடு

655. யோகம் இங்கு தியானத்தைக் குறித்து நின்றது. தியானம் : மனமொருமைப்பட்ட

அல்லது கூரிய சிந்தனை நிலை. ஈர்த்து– இழுத்து.

656. ஓர்ந்து – உணர்ந்து. பற்றிடார் – அகப்படமாட்டார். ஞேயம் – அறியப்படும்பொருள். சிதாகாசம் – ஞானாகாசம். (சித்தவெளி) சீவன்முத்தர் – சீவிக்கும் பொழுதே தனுவாதிகளோடு கூடியும் கூடாமை நின்று ஞேயத்து அழுந்தினோர். ஞேயம் – அறியப்படுவது.

657. ஏய்ந்த – இயைந்த. மறையாதிய – வேதாகமங்கள். நால்வகைச் சீவன் முத்தர்: 1.பிரமவித்து 2.வரன். 3.வரியான். 4. வருட்டன்.

658. சென்றகாரியம் – முடிந்த கருமம், எய்த நிற்பது – வரும் கருமம். அதாவது நாளை சேர்வது. ஒப்பு நோக்கிட்டார் – நன்மை தீமைகளைப் பாரார்.

659. கொள்கலன் – குடம். விதேக முத்தி – முத்திப்பேறு.

660. நம்பி – ஆண்களில் சிறந்தோன். இங்கு சிவஅப்பா முதலி.

661. பாங்குடன் – முறைமையுடன்.

662. அருத்தி – ஆசை.

663. சொருபம் – ஸ்வரூபம். ஸ்வ – தனது. ரூபம் – வடிவம். தடத்தம்=தடம்+ ஸ்தா. தடம்= பக்கம். ஸ்தா= இருத்தல். பிறிதோர் பொருளின் சார்பு பற்றி இலக்கியப் பொருளில் இருக்கும் இலக்கணம்.

664. முத்திறத்த மேனிகள் – அருவம். உருவம். அருவுருவம்.

666. நாதம் – சுத்தமாயாதத்வம் ஐந்தனுள் ஒன்று. நாத= ஓசை, நத்=அசைதல், ஓசை உண்டாதல் எ+று. விந்து – சுத்த மாயை. பிந்த்+உ =துளி. பிந்த்=கூறுபடுதல்.

668. முத்திறத்த உயிர் – விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர்.

669. பரை – சுத்தஞானம்

670. முத்தன் – மலத்தின் நின்றும் விடுபட்டவன். சுவதந்திரன் – தன்வயம் உடையோன், தனது தலைமையை உடையோன்.

671. பரிபாகம் – மலபரிபாகம். பக்குவம் அடைதல்.

672. சத்து – உண்மை. உள்ளது ஸத்=உள்ளது. அசத்து – உள்ளதல்லாதது. உண்மை அல்லாதது. சகல சுத்த கேவலம். இது அவத்தைகளைக் குறிப்பிட்டவாறு. சகலம் – கலை முதலியவற்றோடு கூடிய நிலை. சுத்தம் – பாசம் நீங்கிய நிலை. கேவலம் – தனித்திருத்தல்.

673. சதசத்து— ஆத்துமா, சத்து மசத்துமாயது.

674. திரோதம்—மறைப்பு. மாயேயம் —மாயாகாரியமாய தனு (உடல்) முதலாயின.

675. சகசம்— இயற்கை

679. சுத்தமாயை—சுத்தப்பிரபஞ்சத் துக்குக் காரணமான மாயை, அசுத்தமாயை— சுத்தமாயை யின் காரியமாய் உள்ளது.

681. உபாதானம்— முதற்காரணம் (சிருட்டிக்குத் துணைக் கருவி) சடம்— அசேதனப் பொருள் (அறிவற்ற பொருள்)

683. சஞ்சிதம்— சேர்த்து வைத்த வினை.

684. கரணம்— கருவிகள்.

687. சகலாவத்தை— ஆன்மா 36 தாத்துவங்களுடனும் தாத் விகங்களுடனும் கூடி இலா டத்தானத்தைப் பொருந்தி விடயங்களை அறிந்து அனு பவித்து நிற்கும் நிலை. தாத்விகம்— தத்துவம் சம்பந் தமான உடம்பு முதலியன. இலாடத்தானம்— நெற்றி.

688. துரிசு—குற்றம், சுத்தாவத்தை— பாசம் நீங்கிய நிலை.

689. நிரல்நிறை— ஒழுங்கு முறை

692. திருநோக்கு— குரு பார்வையி னால் மலத்தைக் கெடுத் தல் (நயனதீட்சை) மேலும் பரிசம், வாசகம், மானதம் சாத்திரம், யோகம் முதலா கத் தீட்சை விரியும்.

694. உண்மை—முத்திப்பேறு கரு தியது, உபாயம்—சித்திப் பேறு (உலக இன்பம்).

695. ஔத்திரி— தீவளர்த்து அவி கொடுத்துச் செய்யப்படுவது.

698. தாடலை= தாள்+ தலை இரு சொல் ஒன்று போல் நிற்றல். அத்துவித நிலை.

700. வாதனை— துன்பம்.

701. திருவைந்தெழுத்து சாதகரின் பக்குவநிலைக்கு ஏற்பப் படி முறையில் உபதேசிக்கப் படும். தூலம், சூக்குமம், காரணம் மகாமனு முதல் ஐந்தாக விரியும்.

704. எதிர்நிரல் நிறை— முதலை யும் இறுதியையும் சேர்த்துச் சொல்லும் நிலை.

707. ஓங்காரம் =அ+உ+ம். அ= பிரமன், உ=விஷ்ணு (விண் டு) ம=உருத்திரன்.

709. அநுவாதம்— முன்மொழிந்த தைப் பின்னும் மொழிதல்.

710. தனு— உடம்பு.

711. பதமுத்தி— சாலோக, சாமீப, சாருபம் எனும் மூன்றுமாம். பரமுத்தி— சாயுச்சிய.

714. சங்கமம்— அடியார் கூட்டம்.

716. வியாபகன் — யாண்டும் பரந்து நிற்போன்.

720. சதாக்கியம் :— அவிகாரமான சத்திவிகற்பமான கலைகளா லே தியான மூர்த்தியாக நிரம்புவது. அது சிவ, அமூர்த்தி, மூர்த்தி, கார்த் திரு, கன்மம் என ஐந்து. சதா+ ஆக்கியம்= என்றும் சொல் லப்பட்டது.

722. இட்டலிங்கம் = தன்பொருட்டு

727. பரார்த்தம் — பிறர்பொருட்டு.

731. அந்தரம் — வானம். ஏனம் — பன்றி. பராவி — வழிபட்டு.

732. இன்டை — மாலைவிசேடம்.

733. மாணலம் =மாண்+நலம். மாண் —மாண்பு, சிறப்பு. நலம் — அழகு.

734. கோள் — கிரகம். மாந்தை — மாதோட்டம்.

739. பூவை — காயம்பூ. சேவை — எருதை.

740. நத்து — விருப்பு.

745. நீரான் — தன்மையை உடை யவன்.

747. பலி — வாணனின் தந்தை.

748. பனிவரை — இமயமலை. அடவி — காடு.

751. ஐயைந்து= இருபத்தைந்து.

753. போகம் — இன்பம் முதல. செவ்வி — தன்மை.

753. சலந்ரகாலர் — சலந்திர முனி வர் முதலோர்.

755. அட்டமூர்த்தம்: பூதம் 5, சூரி யர் சந்திரர் 2 வேள்வி முதல்வன் 1.

757. நுவன்ற — சொன்ன. இருக்கை — ஆசனம்.

759. அதள் — தோல். விபுதன் — தேவன்.

760. மறு — குற்றம்.

761. இயைவது — பொருந்துவது.

762. பெட்பு — பெருமை. வாரணை, அசி — இவை இரு ஆறுகள்.

764. ஆகரம் — இருப்பிடம். புணை — தெப்பம்.

765. துளவு — துளசி. விண்டிடின் — கூறின்.

766. தெருட்ட — புகட்ட. ஆடல் — திருவிளையாடல்.

768. வெகுளி — கோபம்.

769. பகீரதி — கங்கை. கடிஞை — பிட்சாபாத்திரம்.

770. தேசு – ஒளி. கலங்கஞர்=கல ங்கு +அஞர் கலக்கத்தோடு கூடிய துன்பம்.

771. கபாடம் – கதவு.

772. ஓவற – ஒழிவின்றி.

774. அயா – அயர்வு, சோர்வு. வியாகுலம் – துன்பம்.

776. இகபோகம் – இப்பிறப்பில் நற்புசிப்புகள். திரம் – ஸ்திரம், உறுதி.

777. பௌவம் – கடல். மகிதலம் – பூமி.

778. ஏண் – வலிமை. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையே விசுவேசர், காசி, மணிகர்ணிகை.

780. பருப்பதம் – பருவதமலை.

782. மிலைச்சி – சூடி, (செருகி)

785. இந்து – சந்திரன்.

786. நானம் – ஸ்நானம், நீராடல்.

787. உக்கிரர் – வீரபத்திரர். அக்கு – உருத்திராக்கம்.

789. முட்டா – குறையாத.

790. மழ – இளமை.

792. பின்றாழ் – பின்னப்பட்ட நீண்ட. அமளி – படுக்கை.

794. அப்பு – நீர் (கங்கை) உளத்திரை – மனத்திரை.

795. மா – விலங்கு. ஆ – பசு. மஞ்சனம் – தீர்த்தம். ஏ – அம்பு.

796. இடந்து – தோண்டி.

798. இலம்பாடு – வறுமை.

799. ஆட்டுதல் – அபிடேகித்தல்.

800. சிதைத்தல் – அழித்தல்.

801. தாதை – தகப்பன். நாயகம் – தலைமை.

802. சாத்தமங்கை – இடவிசேடம். அயவந்தி – ஒரு திருக்கோயில். சிலம்பி – சிலந்தி.

803. அநுசிதம் – இழிசெயல், இலம் – இல்லம்.

804. சங்கை மங்கை – இடவிசேடம். சாக்கியர் – ஓர் அடியார்.

805. தேனு – காமதேனு. ஆவிலை, ஆமாத்தூர், ஆவடுதண்துறை, பெண்ணாகடம். இவை திருத் தலங்கள்.

806. தாணாளும் =தாள்+ நாளும்.

808. கோணாமலை – தொல்புரப் பதியில் வாழ்ந்த பெரியார் ஒருவர், இறுதிக் காலத்தைக் காசிப்பகுதியில் கழித்தவர். கேண்மை – நட்பு. ஓலை – திருமுகம், கடிதம்.

809. கோலம் – அழகு.

811. தமதில்=தமது+ இல். இல்— வீடு.

812. இரவம்=இரவு + அம். அம்— அழகிய.

814. குறி — இலிங்கம்.

815. பௌவமூடு=பௌவம் +ஊடு. பௌவம்— கடல், ஊடு— ஊடாக.

817. கணிமார்— சோதிடர்

818. அடைவு— ஒழுங்கு.

819. குடக்கு— மேற்கு. குணம்— கிழக்கு. தென்முகா— தட்ஷிணா மூர்த்தி, சுதை— சாந்து.

820. துவசத் தம்பம்— கொடித்தம் பம்.

821. கருவறை— மூலத்தானம். அருத்தம்—அருத்தமண்டபம்.

822. குயிற்றி— செய்து.

823. நம்புநர் நவை— தொழுவார் குற்றம்.

826. நவம்— ஒன்பது. பாத்து— பகுத்து.

828. நிகேதனம்— கோயில்.

830. நியாசம்— நிறுவுதல்.

834. புனர் (புநர்)—மீண்டும், திரும் பவும்.

836. அநுக்ஞை—அனுமதி பெறல் பெருஞ்சாந்தி— குடமுழுக்கு. விதானம்— மேற்கட்டி.

839. பூகம்— கமுகு.

842. பொறிமயிர் வாரணம்— சேவல்கள்.

843. அருங்கடி—சிறந்த வாசனை.

844. ஆழி— சில்லு.

845. தாரகாகணம்— விண்மீன்கூட் டம்.

848. வரை—மலை. மான் மதம்— புனுகு.

852. பூசுரா— அந்தணா்.

855. அண்டலா— பகைவா். அரணம்— மூன்று கோட்டைகள். (முப்புரம்)

856. திரோபவம்— மறைத்தல்.

857. தகித்திடும்— எரித்திடும்.

858. சாலி— நெல். கூலம்— சிறு தானியம்.

859. உண்ணிலா = உள்+நிலா. உள்— மனத்திநுள். நிலா— நிலவி.

860. மலையசம்— தென்றல்.

863. வைகல்— நாள்.

865. உடையவா— எம்மை அடிய ராக உடையவர். இறைவன். பொன்திகழ்மடி— பீதாம்பரம்.

867. மலைவு– தடுமாற்றம்.

869. உடன்று வந்தே=உடன்று + உவந்து, உடன்று–அழித்து, இன்றறரும்= இன்னல்+தரும்.

871. பூவைவணன் பூவை+வண் ணன்–வணன் இடைக்குறை. அரந்தை– துன்பம்.

872. கோற்றொடி– கோல்+தொடி, கோல்– வளைந்த தொடி– வளையல்.

874. பயோததி– பாற்சமுத்திரம்.

877. ஐயவிடை=ஐ+அ+இடை-அழ கிய இடை.

881. வெறி– வாசனை. கடை வாசல்– வீட்டு வாசல். நூபுரம்– சிலம்பு.

882. அமரி– ஈங்கு விசாலாட்சி.

884. மாழை–பொன். பீழை–துன் பம்.

885. கண்டு– கற்கண்டு. கனி– கொவ்வைக்கனி. அதரம்– சொண்டு (வாய், இதழ்).

887. ஆதி– ஆதிசத்தி. இச்சை– இச்சாசத்தி. கிரியை–கிரியா சத்தி. ஞானம்–ஞானசத்தி. விரை– வாசனை.

888. நக்கன்– வைரவன்.

889. உறையுள்– இல்லம்.

892. தகையிலியேம்– தகுதியற்ற வன்.

893. உம்பர்– தேவர்.

895. தஞ்சம்–அடைக்கலம். முதா ளர்– வயோதியர்.

898. பிரவாகம்– பெருக்கு.

901. காசினி– பூமி.

903. கரி–யானை. கங்காளர்–எலு ம்பு அணிந்தவர்.

904. தளிர்– குளிர்ந்த. கவின– அழகுசெய்ய. ஒருமகள்–ஒப் பற்ற விசாலாட்சி அம்மை.

905. மணிநடம்– அழகிய கூத்து.

906. விழவொலி– திருவிழா ஆர வாரம். அடுவர்– அழிப்பர்.

907. ஓவா–ஒழியாத. விடையர்– எருதேறி.

909. மயில்– விசாலாட்சி.

910. அமையம்– தக்கசமயம்

911. மதுகரம்– வண்டு. வனசம்– தாமரை.

912. சுவர்க்க இன்பம்– வானுலகை இன்பம்.

914. பூண்–ஆபரணம். உண்கலம்– உணவு உண்ணும் பாத்தி ரம்.

914. சங்கரன்– சுபம் செய்வோன்.

915. திண்ணம் — நிச்சயம்.

916. வெருள் — மயக்கம்.

918. பணிகள் — ஆபரணங்கள். வேட்கை — ஆசை.

919. உகளும் — திரியும்.

921. வாரணம் — தெய்வயானை. குஞ்சரி — தெய்வயானை.

922. நம்பி — வேட்டுவநம்பி. தினை — தினைப்புனம்.

923. தகுவர் — அசுரர். தொழும்பர் — அடியார்.

924. நவ்வி — மான்.

925. வினைவளம் — சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியங்கள்.

926. நோற்றனர் — தவமிருந்தனர்.

927. அம்பரம் — வான். சூர் — அசுரர். புயல் — சண்டமாருதம்.

928. நறாவுதிர் — தேன்சிந்தும். மத்தம் — ஊமத்தம்பூ, விண்டார் — சொன்னார்.

929. குவை — குவியல். எந்தம் அடிகள் — எமது சிவபெருமான்.

930. பொன்னுலவு — இந்திரலோகம். மதலை — குழந்தை.

931. வீறு — வலிமை. பிரமம் — ஞானம்.

932. திரோதம் — மறைப்பு, பாற்றுதல் — வீழச்செய்தல்.

933. உளை — இடம்.

934. முதலாய் — காரணமாய்.

935. வேதனை — துன்பத்தை.

936. வம்பு — புதிது. கணபனித்தல் - கண்ணீர் சிந்துதல்.

937. மிச்சில் — எச்சில்.

938. மந்திரம் — கோயில்

939. இடம் — இடப்பக்கம். அந்தரம் — வானுலகு.

940. அ∴கேனம் — ஆயத எழுத்து (∴) எ∴கம் — வேல்.

940. மெய்யினம் — மெய்எழுத்து. மூவாறுநயனம் — பதினெட்டு விழிகள்.

941. வன்னி — நெருப்பு. பதம் பெயர்த்து — திருவடிதூக்கி.

942. இருமூன்றக்கரம் — ஆறெழுத்து மந்திரம். அக்கரம் — எழுத்து. லீலைகள் — திருவிளையாடல்கள்.

943. இழிந்து — இறங்கி. ஆலம் — நஞ்சு.

944. மாகம் — வானம். தாம்பரம் = தாம் +பரம் தாம் — முருகன், பரம் — மேலோன்.

945. பற்றினார் — திருவடிகளைச் சரணென்று அடைந்தவர். பரிசு — தன்மை.

946. விசாகன் — முருகன் (விசாக நட்சத்திரத்திற் பிறந்தவன்.)

947. புகலுதல் — சொல்லுதல்.

948. மேடம் — ஆட்டுக்கடா.

949. விழைந்து — விரும்பி.

951. வதுவை — திருமணம்.

952. காயெரி — சுடுநெருப்பு. கனன்று — கோபித்து. போகி — இந்திரன். மம்மர் — துன்பம்.

953. சசி — இந்திராணி. ஐயன் — ஐயனார்.

954. இகந்து — நீங்கி.

955. மட்டறா=மட்டு+அறா. மட்டு — தேன். அறா — நீங்காத. சிட்டன் — மேலோன். வாகை — வெற்றி மாலை. வேய்ந்து — அணிந்து.

956. மொழியுட் கொள்ளா= மொழி + உள் + கொள்ளா. மொழி — பேச்சு. உள்கொள்ளா — மனத்துள் கொண்டு எல்லி — சூரியன்.

957. தகுவர் — அசுரர்.

958. வெஞ்சுரம் — பாலைநிலம். நேர — ஒப்ப.

959. அருச்சித்தல் — பூசைபுரிதல்.

960. பூதர் — பூதகணவீரர். அதர் — வழி.

961. தாவடி — போர். மலைதல் — சண்டையிடுதல். வீரதுர்க்கை — வெற்றித்திருமகள்.

962. கோன் — அரசன்.

963. ஆரலர் — கார்த்திகை நட்சத்திரத்தார். நேரலன் — பகைவன். ஊர்ந்து — நடத்தி.

964. ஓகை — உவகை. பயந்தருள் — ஈன்றருளிய.

965. பானாட்கங்குல் — நள்ளிரவு. சேனைநாயகன்-சேனாபதி. சேந்தன் — முருகன் திருப்பெயர்களிலொன்று.

967. வரை — ஈண்டு கிரவுஞ்சமலை. புகர் — நீலம். கண்ணி — அரும்பு.

969. வாய்புதைத்தல் — வாய்பொத்துதல்.

970. மடம் — மடமை. மின்னார் — மின்னல் கொடிபோன்ற இடையினர்

971. நைகிலீர் — வருந்தாதீர். அங்கி — நெருப்பு. வரிப்பம் — திருமணம் செய்வேம்.

972. மல்குதல் — நிறைதல்.

973. நீபம் — கடம்பு. மாகம் — வானம்.

974. ககனம் — வானம்.

977. வேண்டுநெறி — காந்தர்வ மணம்.

980. உருத்தல் — கோபித்தல். செருத்தணி =செரு+தணி. செரு — யுத்தம். தணி — தணிகைமலை.

981. வனசரர் — வேடர்.

982. குறளர் — பூதகணத்தோர். புருகூதன் — இந்திரன். இன்னியம் — இனியபல வாத்தியங்கள்.

983. வழுதி — பாண்டியன்.

984. ஆதரம் — அன்பு. காத்தான் — காப்பாற்றியருளினார்.

985. கமை — பொறுமை. காரணீகன் — நூல் அரங்கேற்

ரத்தின் போது தலைமை தாங்கி விமரிசிப்போன்.

987. தருக்கு – செருக்கு.

987. அதலசேடன் – பூமியைத் தாங்கும் ஆதிசேடன்.

990. திகடரு – திகழ்+தரு – விளக்கம்தரு. கடம் – கடமை. நீத்து – விட்டு.

991. தெரியல் – மாலை.

992. கொந்து – கொத்து (பூங் கொத்து.)

993. முச்சி – உச்சி.

994. நாமமந்திரம் – சரவணபவ. கொண்டோன் – நாயகன். துணித்தல் – வெட்டுதல்.

996. கூடல்-மதுரை. இரங்குநர் – யாசிப்போர்.

997. கூடபய – கூடு+அபய.

998. வரிஇ – வந்து. தண்டு – தண்டாயுதம்.

999. ஏரகம் – திருவேரகம். தா வகல= தா+அகல. தா= குற்றம்.

1000. மன்றாடி = மன்று +ஆடி. மன்று – கனகசபை.

1001. மலையாடி – குன்றுதோ றாடி. நச்சி – விரும்பி. சகம் (ஜகம்) – பூமி.

1002. இழியும் – இறங்கும். அரந்தை – துன்பம்.

1003. தெய்வதமால் வரை – கடவுள் மலை. தமருகம் – உடுக்கை வாத்தியம்.

1004. குன்றவர் – குறவர். அரி வை – பெண். பழககற்றி – பழகு +அகற்றி. பழகு – குற்றம், அகற்றி – நீக்கி.

1005. அல்லணியும் மிடற்றோன் – திருநீலகண்டன். மல் – வளம். தெரிவையர் – மாதர்.

1006. தராதலம் – பூமி.

1007. ஒருவாத – நீங்காத.

1009. அதிரவரு – நடுங்கும் படி வரும். கலுழ – கண்ணீர் சிந்த, முகைபவிழ – மன மொட்டு விரிய.

1010. அரைய – அரசனே (விளி). புரத்தல் – காத்தல்.

1011. திங்கடொட= திங்கள் + தொட. திங்கள் – சந்திரன். நிவந்து ஓங்கி – மிக உய ர்ந்து. நல்லை – நல்லூர். கடைக்கணித்தல் – கடைக் கண்ணால் பார்த்தல்.

1012. துரகம் – குதிரை. மாவை – மாவிட்டபுரம். அகத்துறு வான் – மனக் குகையில் உலவுவான்.

1013. இரித்தல் – கெடுத்தல். பெருகுதளி – பலவாகிய கோயில்கள்.

1014. வாணர் – வாழ்வோர். மா வடு – மாம்பிஞ்சு.

1015. மெய்ந்நூல்கள் – சாத்திர ங்கள்: புகழ்நூல்கள் – தோ த்திரங்கள். உபாசிக்கும் – வணங்கும் (தியானிக்கும்)

1018. சிற்பியர் – கற்றச்சர். கோட் டம் – கோயில். நளினபதச் சுவடு – தாமரைப் பாதச் சுவடு.

1019. அல்லி – அகஇதழ். இதய மடு – இதயக் குளம்.

1022. தாமிரம் – செம்பும் பித்தளை யும் சேர்ந்த கலவை.

1024. எஞ்சிடான் — விடாமற்தொடர்ந்து.

1025. வேணவா — ஆசைப்பெருக்கம். மாணலம் — மிக்க அழகு. தாழாய் நாளையே — தாமதிக்காதீர் நாளைக்கே.

1026. சாந்தி — அமைதி.

1028. இற்ற — ஒடிந்த. மறித்து — மீண்டும். தேரேம் — அறியேம். கொற்றவைவேல் — வெற்றிபொருந்திய கூரிய வேல்.

1029. நவமதாக — புதியதாக.

1031. கணிகள் — சோதிடர்.

1033. கதிரை — கதிர்காமம்.

1035. ஔடதம் — மருந்து.

1036. ஏராடகும் — பெருமை கொண்ட.

1040. தண்ணளியார் — கருணை நிறைந்த.

1041. கனகம் — பொன். அநவரதம் — பிரதிதினமும். தூக்கியசீர்ப்பதம் — குஞ்சிதசரணம்.

1042. அலக்கண் — துன்பம்.

1043. சபாபதி பொற்சபைத் தலைவன்.

1044. சேடு — பெருமை.

1045. பட அரவு — படத்தையுடைய பாம்பு. படி — பூமி.

1046. சிதாகாசம் — சித்தவெளி.

1047. சிவபதிகள் — சிவாலயங்கள்.

1048. பதந்தரு — வீடுதருகின்ற.

1049. அரவார்த்து — பாம்பைக் கட்டி.

1050. கோட்டி — வளைந்து. குமிண்ணகை — புன்னகை. நைதல் — வருந்துதல். பனிதுளிர்ப்ப — ஆனந்தக் கண்ணீர் சொரிய.

1051. மாபரன் — மகாதேவன். நாதம் — ஓசை. சிருட்டி — படைத்தல்.

1052. வீக்கி — கட்டி. உரம் — நெஞ்சு. திதி — காத்தல்.

1053. எரியாடி — தீயிட்டு. அங்கி — நெருப்பு. சங்காரம் — அழித்தல்.

1054. சகசமலம் — இயற்கைமலம். (ஆணவம்.) திரோபவம் — மறைத்தல்.

1055. அநுக்கிரகம் — அருளல்.

1056. மதி — சந்திரன். படனன்கே = படல்+நன்கு+ஏ.

1059. நமசிவய முறையே திருவடி, திருவயிறு, திருத்தோள், திருவதனம், திருமுடி

1060. சிவயநம முறையே துடிக்கரம், வீசுகரம், அமைந்த கரம், அங்கிதரித்த கரம், ஊன்றும் அடி.

1061. உயிர் திருவருள் சத்தியையும் இறைவனையும் கூடும் போது ஞானநடம். இருமலங்களைக் கூடும் போது ஊனநடம்.

1062. ஐந்து சபைகள்: பொன்னம்பலம், இரத்தினசபை, வெள்ளியம்பலம் தாமிரசபை, சித்திர சபை.

1063. கோட்டு — சுற்றிச் சுழன்று.

1064. அரதனம் — இரத்தினம்.

1065. இரசதம் — வெள்ளி.

1066. கட்செவி — பாம்பு.

1067. பதலை — வாத்தியவிசேடம். வாரம் — உரிமை.

1068. முண்டகன் — பிரமதேவர். தாருகக்கான் — தாருகாவனம்.

1069. பன்னகாபரணம் — பாம்புஆபரணம். மாணபயன் — பேரின்பம்.

1070. புடம் — தீயில் இட்டுச் சுத்தி கரித்தல்.

1071. சேடன் — ஆதிசேடன்.

1072. ஐந்தடக்கி — ஐம்புலன்களையும் அடக்கி.

1073. சம்பு — சிவன். பணிக்கிறை — ஆதிசேடன்.

1077. பன்னி – மனைவி.
1082. மூலட்டனாரை – திருமூலட்டா னத்து இறைவனை.
1084. வெ. .கார் – விரும்பார்.
1091. இதழி – கொன்றை. மத்தம் – ஊமத்தை.
1092. வியல் – பெருமை.
1093. சலதி – கங்கை. மடம் – அறி யாமை.
1094. பதுமம் – தாமரை.
1096. புலீச்சரம் – சிதம்பரம்.
1097. தடாதகை – தடாதகைப் பிரா ட்டியார்.
1099. பத்தொடும் எட்டு – பதினெட்டு.
1100. அடிசில் – உணவு. வேம்பு – வேப்ப மாலை.
1101. உணா – உணவு.
1102. இணங்கிலி – அளவற்ற.
1103. நாமிருவோரும் – ஈங்கு பதஞ் சலி, வியாக்கிரபாதர்.
1105. பஞ்சவன் – பாண்டியன்.
1106. சேகரன் – பாண்டியன்.
1117. ஆரணம் – வேதம்.
1118. வேய் – மூங்கில். குணலை – அர்ப்பரிப்பு. இலவம் – இலவ மரம். கரிகான் – எரிந்தகாடு.
1122. புயங்கம் – பாம்பு.
1125. ஒன்பான் சுவை – நவரசம்.
1126. இயங்கள் – வாத்தியங்கள். அப்பு – நீர். பரை – பராசத்தி (உமையவள்.)
1127. கூர்ஞ்சரம்: – கூர்ச்சரம் – தருப் பை.
1128. தானவன் – அசுரன்.
1129. வீட்டுதல் – கொல்லுதல். கே தனம் – கொடி.
1130. ஓச்சுதல் – வீசுதல். சாம்ப – ஒடுங்க.
1132. முகனமர்ந்து – பார்த்து.
1134. சராசரங்கள் – இயங்கு திணை. நிலைத்திணைகள்.
1136. சத்த: – சப்த – ஏழு.
1138. கழி – உப்பங்கழி.
1139. குறளர் – பூதகணத்தார்.
1141. ஞாழல் – மரவிசேடம்.
1142. கமலன் – பிரமதேவன். குக்கு டம் – கோழி.
1143. அணவ – கூட. பிஞ்சு – மாம் பிஞ்சு.
1145. உயிர்நோய் – மும்மலவாதை, பிறவித்துன்பம்.
1147. அலர்நகை-மலர்ந்த சிரிப்பு.
1150. கால – வீச, மகிபனார் – பெரி யோன். அமளி – படுக்கை.
1152. இறக்கை – சிறகு.
1153. உடையார்பூசை – ஆத்மார்த்த பூசை.
1154. ஓடம் – தோணி.
1160. இறைஞ்சுதல் – வணங்குதல்.
1161. துரியம் – சுத்தநிலை.
1164. படிவம் – படிமம் – திருவுரு வம். சிந்து – பொழிகின்ற.
1165. வல்விரைந்து – மிகவிரைந்து.
1166. தமதிலம் – தமது+இல்லம்.
1167. திருவினாயகன்=திரு+இன் + நாயகன்
1168. தனயன் – மகன்.
1169. பேடகம் – பெட்டி. ஆடகம் – பொன். சேட – சிரேட்டனே. நடந்தான்=நடம்+தான். நடம் – கூத்து.
1170. காளை – எருது. பாண்டில் – வண்டில்.
1171. கண்டதை: அதைக் கண்டு என மாற்றுக. அடம்பு – அடப்பங்கொடி. நம்பி – இங்கு கந்தப்பா.
1174. கம்மியன் – தபதி.
1174. கருமான் – தபதி.
1178. கணங்குழை – இங்கு சிவகா மசுந்தரி.

1179. முடங்கல் – கடிதம். கடம் – கடமை.
1180. கோலம் – காட்சி.
1183. வியலிடம் – அகன்ற இடம்.
1184. இடருழந்து – துன்புஅனுபவித்து.
1186. கோசிகம் – பட்டாடை.
1188. தண்டலை – சோலை.
1191. கோளரா – விடப் பாம்பு. உழுவை – புலி. ஆத்தன் – என்றும் உள்ளவன்.
1193. சஞ்சலம் – துன்பம். குரவு – குராமலர்.
1198. இளவேறு = இளமை+ஏறு. ஏறு – எருது. விழவு – விழா. அயர்தல் – செய்தல்.
1199. உரைத்தும் – சொல்லுவோம்.
1200. நித்தியம் – நாள்வழிபாடு. வழு – குறைபாடு. மகோற்சவம் = மகா+ உற்சவம்= பெரு விழா. காமியம் – விருப்புகள், இட்டசித்திகள்.
1204. தீர்தமுத்தரம்= தீர்த்தம்+ உத்தரம்.
1205. அருத்தி – ஆசை.
1207. நிணம் – கொழுப்பு. மேடம் – சித்திரை மாதம்.
1209. ஏடு – இதழ்.
1211. துரகம் – குதிரை. கன்னித் திங்கள். – புரட்டாதிமாதம்.
1212. கலங்கஞர் =கலங்கு + அஞர் = வருத்தும் துன்பம்.
1214. உபவாசம் – உணவு ஒழிந்து இருத்தல்.
1216. தீர்த்தன் – புனிதன். சோம வாரம் – திங்கட் கிழமை.
1219. வாலிது – சிறந்த. நிசி – இரவு.
1220. விண்டு – திருமால்.
1221. தாவில் – குற்றமற்ற.
1224. ஆதிரைநாள் – திருவாதிரை. நட்சத்திரம்.
1225. விபுதர் – தேவர். புலரி – விடியல்.
1226. அலர் – பூ. முகை – மொட்டு. பள்ளி எழுச்சி – திருப்பள்ளி எழுச்சிப் பதிகம்.
1227. நேடி – தேடி, பீடு – பெருமை.
1228. உளம்= உள்ளம் – மனம்.
1230. ஆறு – வழி.
1231. காரார் – முகில்படியும். கிரி – மலை. படிமங்கை – பூமிப் பெண்.
1232. வைகல் – நாள். இலங்காதிரை= இலங்கு +ஆதிரை. ஆதிரை – திருவாதிரை. தொல்லை – பழைய.
1233. பரிதி – சூரியன்.
1235. கூடற்பதி – மதுரை.
1237. தூக்காது – ஆராயாது.
1238. பிறழ்விலாவகை – சாத்திர விதிக்கு மாறாது.
1239. அங்குரார்ப்பணம் – முளையிடுதல்; ஆக்கல் – படைத்தல். துடைத்தல் – அழித்தல். சூர்ணம் – சூர்ணோற்சவம்.
1243. சுதை – சாந்து.
1246. பூர்வாங்கக்கிரியை – விழாவின் முன்பு செய்ய வேண்டிய சாந்தி முதலிய கிரியைகள். பொருணூல்கள் – சாத்திரங்கள்.
1247. வாஸ்துசாந்தி – வாஸ்து புருடனுக்குச் செய்யுஞ் சாந்தி.
1249. கடிநாண் – காப்புக் கயிறு.
1250. கருத்தா – தரும கருத்தா. பேரில் – பெரியவீடு. அற்றம் – சமயம்.

1251. தம்பம் — கொடிமரம். கால்கோள் — தொடக்க விழா.

1252. ஆலமருஞ்செல்வர் — தட்சணாமூர்த்தி. சீலம்-ஒழுக்கம்.

1254. அடைவு — ஒழுங்கு.

1256. ஆகம் — மனம். சுகவாரி — இன்பசமுத்திரம்.

1257. நாளிகேரம் — தேங்காய்.

1261. மூதாளர் — முதியோர். புதிது — புத்தாடை.

1262. பரிசு — தன்மை.

1263. உற்சவர் — உற்சவமூர்த்தி.

1265. கட்டியம் — கடவுளர் எழுந்தருளும் போது விருதுப் பெயர், வெற்றி முதலியவற்றைப் புகழ்ந்து கூறுதல்.

1267. உவட்டுதல் — பிரவாகித்தல்.

1269. சித்தன் — வைரவன்.

1271. நிலவுதல் — விளங்குதல்.

1273. அறைதரற்கு — சொல்லுதற்கு.

1275. கோசமிட — ஒலிப்ப.

1276. பாவுதல் — பரத்தல். கண்ணும் — கருதும்.

1277. மிடி — வறுமை.

1281. சுலா — சுற்றி.

1282. மற்கடம் — குரங்கு, அனுமன். கிருத்திமம் — பூதம்.

1284. விழுமியங்கள் — மேம்பாடுகள்.

1295. பிரபை — ஒளி.

1297. கடிமண வேதிகை — மணப்பந்தர்மேடை.

1299. வைகர்த்தன் — பன்னிருசூரியருள் ஒருவர். பரிதி — சூரியன்.

1301. பொன்னினல் லாடை — பட்டாடை.

1302. காவி — கருங்குவளை. தானம் — கன்னிகாதானம்.

1304. வரன் — மணமகன்(விசுவேசர்). கந்தரம் — கழுத்து.

1305. சேல் — கயல்.

1306. கோதரிசனம் — பசுவைக் காண்டல்.

1307. பாவனை — பாவித்தல்.

1309. மருந்து — அமுது. பதி — கணவன். புன்மை — கீழ்மை.

1310. அட்சதை — மங்கலவரிசி. பாதாதிகேசம் — காலில் இருந்து தலைவரை.

1312. இப்பரிசு — இவ்வண்ணம்.

1313. மாடம் — பெருமாளிகை. சிறுகுடில் — சிறிய ஓலைக் கொட்டில்.

1315. தவிசு — இருக்கை.

1316. வள்ளியார் — சான்றோர்.

1320. உளங்குழைந்து — மனம் உருகி.

## முற்றிற்று

தொகுத்துதவியவர்

திரு. நா. புவனசுந்தரம்

# பிழை திருத்தம்

| பாட்டெண் | வரி | பிழை | சரி |
|---|---|---|---|
| 12 | மேல் | விருதம் | விருத்தம் |
| 13 | 2 | மற்றும் | மன்றும் |
| 16 | 3 | பாந்த | போந்த |
| 20 | 1 | செறித்திலங்க | செறிந்திலங்க |
| 34 | 3 | மானிக்க | மாணிக்க |
| 35 | 2 | போற்றினாலே | பெற்றினாலே |
| 62 | 4 | விழரவயருஞ் | விழாவயருஞ் |
| 80 | 7 | ஐயர் | ஐயர் |
| 82 | 6 | கனை | சுனை |
| 88 | 4 | எனரொமால் | எனலாமால் |
| 100 | 8 | ஏத்தினேள் | ஏத்தினேன் |
| 102 | 2 | தீதெலகந்து | தீதெலாந்து |
| 102 | 3 | கருத்துனைபு | கருந்துணைபு |
| 134 | 4 | தென்றாப | தென்றார் |
| 141 | 6 | விட்டக்ன்றார் | விட்டகன்றார் |
| 148 | 1 | மருவலுறு | மருவலுறா |
| 157 | 4 | செல்வேம் | சொல்வேம் |
| 160 | 2 | தசையார் | தகையார் |
| 176 | 5 | ஆங்கன் | ஆங்கண் |
| 177 | 1 | சீருபரும் | சீருயரும் |
| 198 | 7 | வாழ்ந்திடவே | வாழ்த்திடவே |
| 204 | 2 | கலிப | கவிப |
| 211 | 1 | நல்லவைரு | நல்லைவரு |
| 216 | 2 | திணையந் | திணையைந் |
| 222 | 3 | பெருமைசர்ல் | பெருமைசால் |
| 226 | 4 | கன்போடு | கன்பொடு |
| 238 | 3 | இருக்கைட் | இருக்கையுட் |
| 249 | 5 | மூதல்பி | முதல்பி |
| 259 | 4 | வெதுபியே | வெதும்பியே |
| 272 | 3 | இரும்புலர் | இருள்புலர் |
| 274 | 2 | வலசிஇய | வலமெழீஇப் |
| 295 | 5 | சேனோங்கு | சேணோங்கு |
| 340 | 4 | பலவற்றுள் | பலவவற்றுள் |
| 342 | 1 | வரபயிலும் | வரம்பயிலும் |
| 342 | 1 | ருநார்காள | நாகருளார் |
| 390 | 4 | விளங்கும் | விளங்கிய |
| 409 | 3 | பாலனென | பாவலனென |
| 415 | 4 | ல | பல |
| 445 | 1 | தடங்கலுழும் | கடங்கலுழும் |
| 483 | 3 | பரவலரும் | பரவவரும் |
| | | முகிழ்ந்திடவே | முகிழ்த்திடவே |
| 505 | - | தக்கன் | தக்கனிடம் |
| 535 | 4 | விண்டிலிர் | விண்டீர் |
| 552 | 4 | விகித்ததுவும் | விதித்ததுவும் |
| 553 | 5 | சரபமதாய்க் | சரபமதாய் |

| | | | |
|---|---|---|---|
| 557 | 8 | முதவி | முதலி |
| 567 | 2 | போர்வாழ் | போர்வாள் |
| 588 | 5 | சாகர | சீகர |
| 590 | 1 | வகுத்தலியல் | வகுத்தவியல் |
| 593 | 8 | புகல்சின்றார் | புகல்கின்றார் |
| 604 | - | மூலபர | மூலப்ர |
| 608 | 4 | ஒவற | ஓவற |
| | 8 | சகுத்துமே | பகுத்துமே |
| 610 | 5 | மதித்திடும் | மிதித்திடும் |
| 615 | 7 | உற்றகன்மேந்திர் | உற்றகன்மேந்தி |
| 626 | 7 | திகழுங்கான் | திகழுங்காண் |
| 627 | 6 | சுர்மங் | கர்மங் |
| 628 | 5 | உடுத்தயுடை | உடுத்தவுடை |
| 630 | 3 | வினவுதியெல் | வினவுதியேல் |
| | 8 | கொண்ணி | கொண்ணீ |
| 631 | 6 | நன்னி | நண்ணி |
| 638 | 4 | வகுத்தீகுக் | வகுத்தீங்கு |
| 639 | 3 | மந்றது | மற்றது |
| | 8 | அன்றே | அற்றே |
| 659 | 4 | ரேந்திடு | சேர்ந்திடு |
| 661 | 4 | முருசில | ஒருசில |
| 662 | 4 | ரத்ருதியும் | ருத்தியுடன் |
| 663 | 1 | றொன்னுல்கள் | தொனனூல்கள் |
| 691 | 2 | பிமளயாகாள் | பிரளயாகலர் |
| 711 | 2 | தாக்க | தாகக் |
| 712 | 2 | சாம்ப | சாமீப |
| 737 | 4 | கோகன | கோகண |
| 746 | 7 | கூல | சூல |
| 764 | 4 | பெரும்புனை | பெரும்புணை |
| 768 | 1 | லந்திடு | வந்திடு |
| 789 | 5 | புகநழ | புகழை |
| 789 | 6 | சிவாறு | சிவானு |
| 792 | 7 | துளில் | துயில் |
| 793 | 1 | உளந்தனிே | உளந்தனிலே |
| 795 | 1 | பின்போதிக் | பின்போகித் |
| 798 | 7 | பெருற்குமன்பாற் | பெருகுமன்பாற் |
| 801 | 1 | மறைபாபு | மறைபாடி |
| 842 | 5 | கட்டிந்தான் | கட்டியந்தான் |
| 853 | 3 | வேக | வேத |
| 858 | 4 | யாழி | வாழி |
| 859 | 3 | இசையிகி | இசையிஇ |
| 862 | 4 | கோலமோடுமோ | கோலமோடுமே |
| 863 | 3 | மிகிகோர் | மிக்கோர் |
| | 6 | உவந்தும | உவந்துமே |
| 883 | 7 | யறோ | யன்றோ |
| 933 | 6 | அனைத்துமே | அணைத்துமே |
| 936 | 2 | இன்பமாய்க் | இன்பமாக் |
| 940 | 2 | முருகா | முருகன் |

| | | | |
|---|---|---|---|
| 945 | 2 | தாளினை | தாளிணை |
| 970 | 1 | வதத்து | தவத்து |
| 977 | 4 | ஆகை | ஆசை |
| 980 | 5 | யின்னாம் | மின்னாம் |
| 989 | 4 | வெண்ண | வென்ன |
| | 8 | வருந்தமர் | வருந்துமா |
| 990 | 1 | திருத்தரு | திருத்தகு |
| 992 | 3 | பின்னைப் | பிள்ளைப் |
| 1011 | 1 | திங்கெகொட | திங்கடொட |
| | 7 | இங்கனெமைக் | இங்கணெமைக் |
| 1025 | 8 | நென்னலே | தின்னே |
| 1039 | | கூறிகிற்பாம் | கூறுகிற்பாம் |
| 1094 | 6 | தைமதிக் | தைமதி |
| 1113 | 4 | விழைந்த | விளைந்த |
| 1116 | 3 | ஏற்புடம்பு | எற்புடம்பு |
| 1125 | 2 | சிறந்துய | சிறந்துயர் |
| | 3 | பா | பாவ |
| 1127 | 5 | சமர | சரம |
| 1137 | 2 | பலவுடனா | பலவுடனாய்த் |
| 1138 | 3 | உயனபு | உயரன்பு |
| | 7 | திருநடன | திருநடனம |
| 1149 | 5 | அறம்பரி | அறம்புரி |
| 1151 | 7 | வணிதை | வனிதை |
| 1159 | 5 | இருந்து | இருத்து |
| | 5 | ரத்ந | ரத்த |
| 1199 | 7 | மிங்கண் | மீங்கண் |
| 1203 | 2 | சிட்டார் | சிட்டரார் |
| 1220 | 1 | பன்னகல் | பன்னகப் |
| 1231 | 1 | ஒரும் | ஓரும் |
| 1232 | 4 | நாளென | நாளெனவே |
| 1233 | 5 | தெரிகின் | தெரியின் |
| 1234 | 2 | முன்னாள் | முன்னாளில் |
| 1239 | 6 | சூரண | சூர்ணமே |
| 1241 | 1 | விழாவைக் | விழவைக் |
| 1246 | 2 | புகன்றவை | புகன்றவகை |
| 1253 | 3 | வேணியனார்க்கல | வேணியர்க்கங் |
| 1274 | 7 | அன்ணமுடன் | அன்னமுடன் |
| 1294 | 8 | நிறையூண்கள் | நிறைபூண்கள் |

## ஆசிரியரின் ஆக்கங்கள் சில.................

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
(திருமந்திரம் 81)

### I செய்யுள் நூல்கள்

♦ குழந்தை இலக்கியம்

1. குழந்தைகளுக்கான இன்பத் தமிழப் பாடல்கள்- யாழ்.கு.வி.வெளியீடு

♦ பிரபந்த இலக்கியம்

**பதிகம்**

1. நீர்கொழும்பு ஸ்ரீ சிங்கமாகாளிதிருப்பதிகம்- யாழ்.கு.வி.வெளியீடு
2. நீர்கொழும்பு மாரியம்மன் திருப்பதிகம்
3. புங்கைநகர் வீரகத்திவிநாயகர் திருப்பதிகம்- யாழ்.கு.வி.வெளியீடு
4. காரை திக்கரை முருகன் திருப்பதிகம்
5. வட்டுக்கோட்டை களவியோடை மாரியம்மன் திருப்பதிகம்
௬. வட்டூர் கணவன் தோட்டம் காளியன் ஒல்லை அருள்மிகு மாகாளி பதிகம்- கங்கை கொம்பியுட்டர் பிறின்ட்

**மாலை**

1. நீர்கொழும்பு சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை ஸ்ரீகாந்தா அச்சகம்
2. வட்டுக்கோட்டை விசுவேசர் மும்மணிமாலை- யாழ்.கு.வி.வெளியீடு
3. சந்நிதி முருகன் செஞ்சொன்மாலை

4. வட்டுக்கோட்டை வெப்பட்டி ஒல்லை முருகையசுவாமி நான்மணிமாலை

**அந்தாதி**

1. வட்டுக்கோட்டை பிராட்டிவளவு ஞானவைரவசுவாமி அந்தாதி-யாழ்.கற்பகவிநாயகர் அச்சகம்
2. நீாகொழும்பு சித்திவிநாயகர் அந்தாதி

**பிள்ளைத் தமிழ்**

1. வட்டுக்கோட்டை வீயோடை இலுப்பையடி முத்துமாரி அம்மன் பிள்ளைத் தமிழ்

**திருவூஞ்சல்**

1) காரை தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவூஞ்சல் ஸ்ரீ காந்தா யாழ்ப்பாணம்
2) நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் திருவூஞ்சல்
3) நீர்கொழும்பு ஸ்ரீ சிங்கமாகாளி திருவூஞ்சல்
4) வட்டுக்கோட்டை வன்னியன் தோட்டம் சின்னக்கதிர்காமம் அருள்மிகு சண்முகப் பெருமான் திருவூஞ்சல்-யாழ் கற்பகவிநாயகர் அச்சகம்
5) வட்டுக்கோட்டை புயங்கொல்லை முருகஞான வைரவர் திருவூஞ்சல்
6) வட்டுக்கோட்டை பிராட்டி வளவு ஞானவைரவர்திருவூஞ்சல்-யாழ் கற்பக விநாயகர் அச்சகம்
7) வட்டுக்கோட்டை களவியோடை அருள்மிகு பிங்கல விநாயகர் திருவூஞ்சல்
8) பாரிஸ் அருள்மிகு விநாயகர் திருவூஞ்சல்

**திருப்பள்ளியெழுச்சி**

1) பகவான் ஸ்ரீ சத்தியசாயி திருப்பள்ளியெழுச்சி: கொமேஷல் அச்சகம் யாழ்ப்பாணம்

**அம்மானை**

1) நாலவர் அம்மானை

**போற்றிப்ப∴றொடை**

1) முறிகண்டி விநாயகர் போற்றிப்ப∴றொடை

**O பிற**

1. வட்டுக்கோட்டை அருள்மிகு ஞானவைரவசுவாமி அகவல்
2. வட்டுக்கோட்டை கணவன் தோட்டம் காளியன் ஒலலை அருள்மிகு மாகாளி போற்றி அகவல்
3. போதிமாதவன்
4. வழிவழிவள்ளுவர்

**II உரைகண்ட நூல்கள்**

திக்கைத் திரிபந்தாதி-யாழ் கற்பகவிநாயகர் அச்சகம்

தன்னை யமக அந்தாதி-

திருக்குறள் அறத்துப்பால்-

திருவருட்பயன்- ஸ்ரீ காந்தா அச்சம்

காயத்திரி மந்திரம்- கு.வி அச்சம்

கந்தர்கலிவெண்பா

**III வசன நூல்கள்**

1. மாணவர் செந்தமிழ்க் கட்டுரைகள் -ஸ்ரீகாந்தா அச்சகம் யாழ்
2. குழந்தைகளுக்கான இன்பத்தமிழ்க் கட்டுரைகள் -கு.வி அச்சகம் யாழ்
3. சங்க நூல்களில் வரும் செஞ்சொல் ஓவியங்கள்
4. தமிழமுதம் பகுதி I கு.வி. அச்சகம் யாழ்ப்பாணம்
5. பழந்தமிழர் விழுமியங்கள்- கட்டுரைத் தொகுப்பு